வார இதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

இதழ் - 19 | 07.03.2024 - 13.03.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00

## குமரப்பா, திலீபன், கிட்டு தொடக்கம்

# சாந்தன் வரை...

## ஈழத் தமிழர்கள் மீதான

# “பாரதத்தின்” கோரப்பசி எப்போது அடங்கும்!!








# இலங்கையில் உண்மையைக் கண்டறியும் நீதிக்கான சூழல் இன்னும் இல்லை!



## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அதிருப்தி!!

தேசியம் THESIYAM www.thesiyamnews.com
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# செப்ரம்பரை இலக்கு வைக்கும் நல்லிணக்க ஆணைக்குழு



உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகம் அமைக்கப்பட்டு அதனை ஆணைக்குழுவாக அமைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டங்களை இலங்கை அரசாங்கம் விரைவான முனைப்புடன் செய்துவருகிறது. அதற்கு பிரதானமான காரணங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு சுருக்குகளுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த முயற்சியானது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் செப்ரம்பர் மாத அமர்வினை இலக்காகக் கொண்டு மாத்திரமே மேற் கொள்ளப்படுகிறது என்பதே வெளிப்படை.

இலங்கையில் 1956கள் முதல் அமைக்கப்பட்ட உண்மையைக் கண்ட றிவதற்கான ஏற்பாடுகள் இதுவரையில் அவற்றின் நோக்கங்களாகக் கூறப்படுகின்றவற்றின் இறுதி நிலையை எட்ட வில்லை என்பது அனைவரும் அறிந்ததே. உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக் காலச் செயலகத்தின் 'தேசிய ரீதியாக பொது மக்கள் கருத்த றியும் நடவடிக்கைகள் வடக்கு கிழக்கை முதன்மைப்படுத்தியதாக நடைபெற்று வருகிறது. வடக்கிலும், கிழக்கிலும், தேசிய மட்டத்திலும் மேற்கொள்ளப்படும் இச் செயலகத்தின் சந்திப்புக்கள் முக்கியமாக சந்திக்கவேண்டியவர்களைச் சந்திக்கவில்லை. அவர்களிடமிருந்து சரியான முறையில் எந்த பின்னூட்டல்களையும் பெற்றுக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுகள் பரவலக வந்தவண்ணமிருக்கின்றன.

இடைக்கால செயலக அதிகாரிகள் குழுவின் விஜயமானது, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான நிலையான கட்டமைப்பை உருவாக்குவதற்கான விடயங்கள் மற்றும் பரிந்துரைகளை சேகரிப்பதை நோக்கமாகக் கொண்தாக இருந்தாலும், கடந்த கால அனுபவங்களின் காரணமாக தமிழர் தரப்பினரின் பொது, மக்கள், சிவில் சமூகத் தரப்பினரது இவ் ஆணைக்குழு தொடர்பான பிரதிபலிப்புகள் இச் செயல்முறை தேவையில்லை என்பதாக இருந்தாலும், அந்த மறுப்பு அல்லது எதிர்ப்பு ஆக்கபூர்வமானதாக அல்லாமல் எழுந்தமானமானதாக இருக்கக்கூடாது என்ற கருத்து நிலைகளும் காணப்படுகின்றன. வழமையாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் மார்ச்மாத அமர்வு, மற்றும் செப்ரம்பர் மாத அமர்வுகள் நடைபெறுகின்ற அல்லது அது ஆரம்பிக்கின்ற காலங்களில் தங்களுக்கான ஏது நிலைகளை உருவாக்கிக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் காண்பிக்கப்படும் காட்சிகள் அவற்றின் முடிவில் ஏதுமற்றவைகளாக மாறிவிடுவதே வழமை. அது போன்றதொன்றாகவே தமிழர் தரப்பினாலும் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் ஈடுபாடு காட்டும் சர்வதேச பார்க்கப்பட்டு விமர்சிக்கப்பட்டு வருகின்றன. இது நாங்கள் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்கிறோம். தமிழர்களுக்குத்தான் விருப்பமோ ஏற்றுக் கொள்ளும் மனோநிலையே இல்லை என்பதனைக் காண்பிப்பதற்குக் காரணமாக மாறிவிடுகின்ற சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இலங்கையின் சுதந்திரத்துக்குப்பின்னர் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளான மொழி, பல்கலைக்கழக அனுமதி, இனக்கலவரம், சிங்கள குடியேற்றம் போன்றவைகள் தமிழ், சிங்கள மக்கள் இடையே மோதல்களுக்கு காரணமாக இருந்தன. 1956ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த டட்லி சேனாநாயக்க பதவி விலகிய பின் ஆட்சிக்கு வந் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்கள மொழிச் சட்டத்தைக் கொண்டுவந்தார். இது தமிழர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது.

இதனால் உருவான தமிழர்கள் அறவழிப் போராட்டங்கள் காரணமாக பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவிற்கும், தந்தை செல்வநாயகத்திற்கும் இடையில் பண்டா – செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இருந்தாலும், பௌத்த பிக்குகள், எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களால் இந்த ஒப்பந்தம் கிடப்பில் போடப்பட்டது. அதன் பின்னர் டட்லி செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அது கூட நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னர் வந்த ஜனாதிபதிகள் முன்வைத்த திட்டங்களும் சிங்களப் பேரினவாதத்தினால் எதிர்ப்புகளுக்கே உள்ளானது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களால் தமிழர்களின் இனப்பரம்பல் குறைப்பதற்கான முயற்சிகள், இனவழிப்புச் செயற்பாடுகள், தமிழர்களது இருப்புகளைக் கேள்விக்குள்ளாக்கியமை, முள்ளிவாய்க்கால் இறுதி யுத்த வேளையிலும் பெரும் இனவழிப்புச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

அதே நேரத்தில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி இதுவரையில் கிடைப்பதாக இல்லை. இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இந்திய நாட்டின் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் 1987ஆம் ஆண்டு ஜ/லை மாதம் 29ஆம் திகதி அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திற்குத் தீர்வாக இந்த மாகாணசபை முறைமை அமையும் என்ற முழுமையான நம்பிக்கை இல்லையானாலும் இப்போதும், காணி, பொலீஸ் அதிகாரங்களற்ற வெற்றுப் பாத்திரமொன்றை தமிழர்களிடம் திணிக்கின்ற செயற்பாடே இப்போதும் பேசப்படுகிறது. வடக்குக் கிழக்கு மாகாண சபையை தமிழர்கள் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அதன் முழுமையான நடைமுறைப் படுத்தலின்மை காரணமாக வட கிழக்கு மாகாண சபையின் முதலாவதும் இறுதியுமான முதலமைச்சர் வரதராஜபெருமாள் தமிழீழத்தினைப் பிரகடனப்படுத்திவிட்டு இந்தியாவுக்குச் சென்றார். அதன் பின்னர் நடைபெற்றவைகள் மிக மோசமான நிலைமைகளை உருவாக்கின.

ஆரம்பத்தில் இந்தியா முழுமையான ஆதரவு வழங்கிய இந்தியா தமிழர்களின் நிரந்தர எதிரியாக மாறிப்போனது. தமிழர்களின் போராட்டத்திற்குத் தீர்வாக, முன்னுரிமை வழங்கும் வகையில் உருவான மாணாக சபையினை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி 2006ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து வடக்கு கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் 2007ஆம் ஆண்டு தீர்ப்பு வழுங்கி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இரண்டாக பிரித்து உத்தரவு பிறப்பித்தது. இது கூட நல்லிணக்கத்தில் பேரினவாதிகள் விருப்பற்றவர்கள் என்பதனை நிரூபித்தது. 2008ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்திற்கு தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட்டு அந்த மாகாண சபை இயங்கச் செய்யப்பட்டது. ஆனாலும், இரு சபைகளும் கலைக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த பின்னரும் தேர்தல் நடத்தப்படவில்லை. இது பெரும் ஜனநாயக விரோதச் செயலாகவே பார்க்கப்பட வேண்டும். 2009ஆம் ஆண்டு மே 18 உடன் தமிழர்களின் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச ஜனாதிபதி 13 பிளஸ், பிளஸ் வழங்கப்போவதாக இந்தியாவுக்கும் சர்வதேசத்திற்கும் வாக்குறுதியளித்தார். ஆனால் அதுவும் நடைபெற்றிருக்கவில்லை.

இது கூட நல்லிணக்கத்தினை இல்லாமல் செய்யும் செயற்பாடே. அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பெரவையில் 30 - 1, 51- 1 எனக் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் இதுவரையில் முழுமையாகவோ இதய சுத்தியுடனோ நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்வாறு ஒற்றையாட்சி அரசியலமைப்பில் வேரூ ன்றி இருக்கின்ற இலங்கை அரசாங்கமானது சிங்களப் பெரினவாத மனோநிலையில் இருந்து விடுபட்டதாகவோ, அதிலிருந்து விலகி தமிழர்களின் காலங்காலமாக நீடிக்கும் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை வழங்குவதற்கு தயாராக இல்லை என்பதையே நிரூபித்து வந்திருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வாக சமஸ்ரியைக் கோரும் தமிழர்கள் 13யேனும் அரசாங்கம் வழங்கும், அதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நடைபெற்ற, நடைபெறுகின்ற சம்பவங்கள் அதற்கான எந்தவொரு ஏதுநிலையையும் காண்பிக்கவில்லை என்பதே உண்மை.

இந்த நிலையில் மீண்டும் ஒருமுறை செப்ரம்பர் மாதத்துக்காக தமிழர்கள் மீண்டும் ஒருமுறை ஏமாற்றப்படப்போகிறார்கள் என்றே நம்பிக்கைகொள்வோம். இந்த நாட்டில், தமிழர்கள் சிறிதாகவேனும் அதிகாரத்தினைப் பெற்றுவிடக் கூடாது என்ற சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனை இருக்கும்வரையில்உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் கேள்விக்குறியே. அத்துடன், நல்லிணக்கம் என்ற கற்பனையான, மாயையான பேச்சுகள் பயனற்றதே.

**ஆசிரியர்**

# இந்திய அரசாங்கமும் சாந்தனுக்கு

## கொடூர வேலையை செய்திருக்கின்றது

# ரவிகரன் ஆதங்கம்



இலங்கை அரசாங்கத்தை போல் இந்திய அரசாங்கமும் சாந்தனுக்கு கொடூர வேலையை செய்திருக்கின்றது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

சாந்தனின் இறப்பு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு கூறியுள்ளார்.அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்தியா தீர்வை எமக்கு தருவதெனில் எப்போதே தந்திருக்க வேண்டும். தீர்வு விடயத்தில் நழுவல் போக்கிலையே இருக்கின்றது.

அவர்களால் அறிவிக்கப்பட்ட மாகாணசபை என்பது கூட இன்றுவரை இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்காமல் அரசாங்கத்தின் போக்கிலேயே விட்டுக்கொடுக்கும் நிலைதான் காணப்படுகின்றது.இதற்கமைய மாகாண சபை இன்று இல்லாத நிலையில் தான் காணப்படுகின்றது.

அதேபோல் தான் சிறைச்சாலையில் இருந்த சாந்தன் அவர்களுடைய இறப்பு ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு சம்பவம்.

மேலும், இறுதியாக எழுதிய கடிதம், தாய் அதற்காக போராடிய விடயங்கள் இவ்வளவு காலமும் சிறையில் வைத்திருந்து போராடிய தியாகியை இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கலாம்.

அந்த ஆசையை கூட நிறைவேற்றாமல் கொடூர வேலையை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே எங்களுக்கு செய்வது போல் இந்திய அரசாங்கமும் இவ்விடத்தில் செய்திருக்கின்றது."என்றார்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!

SCAN ME

# கிழக்கில் சிவந்த சுவடுகள்... 04

## உடும்பன்குளம் வயல்வெளியில் நடந்த கொடூரம் (தொடர்ச்சி)





அதன் பின்னர் மலையில் பயப்பீதியில் உறைந்திருந்த எம் அனைவரையும், துப்பாக்கி, வாள் முனையில் கைதுசெய்து வயலுக்குள் கொண்டு வந்தார்கள். அதில் ஆண்கள் கைகளையும் கால்களையும் கட்டி வயலில் அமர வைத்து சரமாரியாகத் தாக்கினார்கள். பெண்களை அவ்விடத்தை வீட்டு ஓடச் சொன்னார்கள். சற்றுத் தூரம் ஓடியதும் எம்மை நோக்கி இராணுவத்தினர் சுடத்தொடங்கினார்கள். அவரு ஓடும் போது சுடப்பட்டதனால் தான்



நான் காலில் படுகாயம டைந்தேன். அப்படியே ஓடி எம் ஊர் வந்து சேர்ந்தோம்.

இராணுவம் சுற்றி வளைத்துப் பிடித்து தாக்கிக் கொண்டிருந்தவர்களின் என் உறவு முறையான அண்ணா ஒருவரும் இருந்தார். அவர் வாய்பேசமுடியாதவர், அவரை இராணுவம் கண்களைக் கட்டிவிட்டு ஓடச் சொல்லியிருக்கிறது. அவரோ தட்டுத்தடுமாறி ஓடி மலையடிவாரத்தில் மறைந்திருந்து, வயலுக்குள் நடப்பதைப் பார்த்திருக்கிறார். அந்த வயல்வெளிக்குள் பிடிக்கப்பட்டிருந்த மிகுதியானவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவரே தப்பி வந்து ஊரவருக்கு சைகை மூலம் சொன்னார். இராணுவம், சுற்றிவளைத்த அனைவரையும் அடித்தும், துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும் கொன்றிருக்கிறது. எனது அப்பா அப்போது இறக்கவில்லை. வயலுக்கு அருகான அருவியில் குற்றுயிரும், குறையுயிருமாகக் கிடந்திருக்கிறார். அந் நேரம் காயமடைந்த இறந்த அனைவரையுமே எங்களின் உழவு இயந்திரத்தில் குவித்து எரித்திருக்கின்றனர். பலர் உயிரிரும் தீயில் கருகி, துடிதுடித்து இறந்திருக்கின்றனர்.

வயலில் வேலைக்கு வந்திருந்தவர்கள் மட்டும் இந்தப் படுகொலையில் கொல்லப்படவில்லை. எங்கள் கிராமங்களில் வயல் அறுவடை முடிந்து, சூடடிக்கும் நாட்களில் வறியவர்களுக்கு கடகக் கணக்கில் நெல்தானம் செய்வது வழமை. அதற்காக அயல் ஊர்களில் இருந்து வறுமைப்பட்டவர்கள் வயல்வேலை நடக்கும் இடங்களுக்கு வருவார்கள். அவ்வாறு தான் அன்றைய தினம் உடும்பன்குள வயல்வெளிக்கும் தானம் பெறுவதற்காக அயல் கிராமத்தவர்கள் வந்திருந்தனர். அவர்களைக் கூட இராணுவம் விட்டு வைக்கவில்லை. அனைவரையுமே சுட்டுக்கொன்றனர்.

எல்லாம் முடிந்து விட்டது. இப் போதும், அப்பாவையும் எங்கள் கிராமத்தவர்களையும் கூட்டாக எரித்த உழவு இயந்திரத்தின்பாகங்கள் எங்கள் வீட்டில் உண்டு. அதனை இப்படுகொலையின் நினைவுச் சின்னங்களாக வைத்திருக்கிறோம் என சியாமளா என்ற அந்த பெண் தெரிவித்திருக்கிறார். இந்தப் படுகொலையில் 132 தமிழர்கள் கொல்லட்டனர். இதனை லெப்ரினன் சந்திரபால என அழைக்கப்பட்ட அதிகாரியின் கீழ் இயங்கிய படையினரும் முஸ்லிம் ஊர்காவற்படையைச் சேர்ந்த 12 பேரும் இணைந்து மேற்கொண்டதாக அக்காலப்பகுதியில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இப் படுகொலை செய்தி வெளிவந்த போது அதனை மறுதலித்த அன்றைய ஆட்சியாளரான தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலக்முதலி சட்டவிரோதமாக கஞ்சா பயிரிட்ட பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரை சுட்டதன் காரணமாக படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் 40 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் கூறியிருந்தார். இப்படுகொலை நடந்த இரு தினங்களின் பின்னர் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத்தலைவர் வண.பிதா சந்திரா பெர்னாண்டோ, அக்கரைப்பற்று பிரஜைகள் குழு தலைவர் அகமட் லெப்பை, பொதுச்செயலாளர் எஸ்.ரி.மூர்த்தி, உபதலைவர் வணபிதா பிலிப். ஆகியோர் மனித உரிமை அமைப்பு ஒன்றின் உதவியுடன் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்றிருந்தது.

> **“ இராணுவம், சுற்றிவளைத்த அனைவரையும் அடித்தும், துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும் கொன்றிருக்கிறது. எனது அப்பா அப்போது இறக்கவில்லை. வயலுக்கு அருகான அருவியில் குற்றுயிரும், குறையுயிருமாகக் கிடந்திருக்கிறார். ”**

வைக்கோலில் போட்டு எரிக்கப்பட்ட சடலங்களை மீட்டெடுத்தனர். 66 சடலங்கள் மீட்கப்பட்ட போதிலும் 39 சடலங்களை மட்டுமே உறவினர்களால் அடையாளம் காண முடிந்தது. ஏனைய சடலங்கள் அடையாளம் காண முடியாத அளவிற்கு எரிந்து சம்பலாகிவிட்டது. இச் சடலங்களை எடுத்து ஒரே புதை குழியில் அடக்கம் செய்தனர். இதன் பின்னர் பிரஜைகள் குழுவினர் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி விபரங்களை வெளியிட்டனர். இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் ஆ.நல்லதம்பி. வடமராட்சி கிழக்கு ஆழியவளையை சேர்ந்த இவர் அட்டப்பள்ளம் ஐந்தாம் குறிச்சியில் திருமணம் செய்திருந்தார். இவருக்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர். வயல் அறுவடை வேலைக்கு நல்லதம்பியுடன் அவரின் ஒருமகனும், இருமகள்களின் கணவன்மாரும் சென்றிருந்தனர். ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பெரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

### அடையாளம் காணப்பட்ட 39 பேரின் பெயர் விபரங்கள்.

இராசையா தவேந்திரன், இராமசாமி கந்தையா, ந.கோபாலகிருஷ்ணன், ந.விநாயகமூர்த்தி, க.பாக்கியராசா கதிரேசபிள்ளை வைரமுத்து, குமாரவேல் நாகராசா, கணேசமூர்த்தி பேரின்பன், கணேசபின்னை மோகனராசா, கணபதி வடிவேல், பத்மநாதன், மைலன் தியாகராசா, தர்மன், தசாப்பு செபமாலை, தசாப்பு செல்லையா, துரை இராமலிங்கம், தம்பிப்பிள்ளை குமாரவேல், மயில் வாகனம் தியாகராசா, மார்க்கண்டு ரவீந்திரன், முத்துப்போடி சுமணாவதி, முத்துசாமி முத்துலிங்கம், மசன்னா ஜெயராஜ், ஆ.நல்லதம்பி, ஆ.சோமசுந்தரம், பொன்னன் இராசதுரை, பொன்னம்பலம் யோகராசா. சோமசுந்தரம் கருணாநிதி,



வெங்கிட்டன் குழந்தை, ஞானமுத்து புவனேந்திரன், சுந்தரம் சின்னவன், சீனித்தம்பி, சீனித்தம்பி தவநாதன், சீனித்தம்பி அருள் செல்வன், சில வெஸ்டர் இன்னாசி.சுவாமி டேவிட், வைர முத்து சுந்தரலிங்கம், வர்ணகுல சிங்கம் புண்ணியமூர்த்தி, விஸ்வகேது இராசா, ரங்கன் போல்.

இப்படுகொலை நடைபெற்ற காலப்பகுதி பதற்றமும் அச்சமும் நிறைந்த காலமாகும். படையினரின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது மட்டக்களப்பு நகரில் இருந்த பிரஜைகள் குழுத்தலைவர் வணபிதா சந்திரா பெர்ணாண்டோ தலைமையிலான குழுவினர் உடும்பன் குளத்திற்கு சென்று இப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை புரிந்தனர்.

இத்தகைய இடர்கால பேருதவிகளை புரிந்த வணபிதா. சந்திரா பெர்ணாண்டோ அவர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் மட்டக்களப்பு புனித மரியான் தேவாலயத்திற்குள் வைத்து சுட்டுக்கொன்றனர். இப்படுகொலை பற்றி 22 பெப்ரவரி 1985 ல் வெளிவந்த கார்டியன் ஆங்கில பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. 1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 42ஆவது அமர்வில் இந்திய பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை தாங்கிய டி.எஸ்.டிலோன் உடும்பன்குளம் படுகொலை சம்பவம் பற்றி ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார். ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் இக்கூட்டத்தொடரில் அவுஸ்திரேலியா பாராளுமன்ற குழுவின் தலைவர் செனட்டர் ஏ.எல்.கிஸ்ஸன் அவர்களும் இப்படுகொலை பற்றி ஐ.நா.வின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

லண்டனை தலைமையகமாக கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் 1985ஆம் ஆண்டு ஆண்டறிக்கையிலும் உடும்பன்குளம் படுகொலை பற்றி விபரிக்கப்பட்டிருக்கிறது. இந்த படுகொலையை யார் செய்தார்கள் என்ற விபரங்களை சர்வதேச மன்னிப்புச் சபை தனது ஆண்டறிக்கையில் தெரிவித்திருந்தது. தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் தொடர்பாக அமேரிக்க கலிபோனிய நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அறிக்கையின் 27ம் பக்கத்தில் உடும்பன்குளம் படுகொலைதொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

தேசியம்
www.thesiyamnews.com THESIYAM



# உலகத் தமிழர்களுக்கு சிறப்பு முகாமில் இருந்து ஓர் திறந்த மடல்



– இராபர்ட் பயஸ் –

வணக்கம். நான் இராபர்ட் பயஸ் பேசுகிறேன். உங்களை உங்களோடு உங்களில் ஒருவனாக சுதந்திர மனிதனாக இல்லாமல் எங்களில் ஒருவரான சாந்தனை இழந்து இதோ இந்த கம்பிகளுக்கு பின்னால் இருந்து இப்படி உங்களை சந்திக்க நேர்ந்தது மிகுந்த வருத்தமளிக்கிறது. 32 வருட நீண்ட சிறைக் கொட்டடிக்கு பிறகு கடந்த 11-11- 2022 அன்று உச்சநீதிமன்றம் விடுதலை செய்த ஆறு பேரில் நானும் ஒருவன். அந்த ஆறுபேரில் நான், ஜெயக்குமார், முருகன் மற்றும் சாந்தன் ஆகிய நால்வரையும் இலங்கைத் தமிழர் எனக் காரணம் கூறி இந்திய வெளியுறவுத்துறை நாட்டைவிட்டு வெளியே அனுப்பும் வரை சிறப்பு முகாமில் அடைத்து வைக்க உத்தரவிட்டது.

தொலைந்து போன வாழ்க்கையை எதிர்நோக்கி 32 வருட நீண்ட காத்திருப்பு முற்றுபெறும் தருவாயில் கூட விடுதலையை ருசிக்க முடியாமல், சிறிது நேரம் கூட விடுதலைக் காற்றை சுவாசிக்க முடியாமல் புழல் சிறையிலிருந்து நானும் ஜெயக்குமாரும் வேலூர் சிறையிலிருந்து சாந்தனும் முருகனும் திருச்சி சிறப்பு முகாமிற்கு கொண்டு வந்து அடைக்கப்பட்டோம். இதோ முடியப்போகுது 32 ஆண்டுக்கால சிறைக் காத்திருப்பு என்று எண்ணிய எங்களுக்கு அப்பொழுது விளங்கவில்லை நாங்கள் சிறை மாற்றப்படுகிறோம் என்று. ஆம், அன்று நடந்தேறியது அப்பட்டமான சிறை மாறுதல் தான் என்பதை எங்களுக்கு காலம் தான் விளக்கியது.

இது சிறையல்ல சிறப்பு முகாம் தானே என்று எண்ணிய எங்களுக்கு இது சிறையல்ல சிறையை விட கொடுஞ்சிறை என்பதும் எங்களுக்கு போகப்போகத் தான் விளங்கியது. நாட்டைவிட்டு அனுப்பும்வரை எங்களை சிறப்பு முகாமில் வைக்கிறோம் என்றவர்கள் இன்றைய தேதிவரை நாட்டைவிட்டு அனுப்புவதற்கு எடுத்த முன்னெடுப்புகள் என்னவென்று கேட்டால் மிகப்பெரிய கேள்விக் குறியும் ஆச்சரியக்குறியும் தான் மிஞ்சும். ”சிறப்பு முகாமா..? அது ஜெயில் மாதிரிலாம் இல்லைங்க சார். எல்லா வசதிகளும் செய்து கொடுப்போம்” என்று பேசி சமாளிக்கும் அரசும் நிர்வாகமும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 2 உயிர்களை பலி வாங்கியிருக்கிறது. கடந்த ஜனவரி 28 ஆம் தேதி ஒரு வார காலமாக மருந்து மாத்திரை கிடைக்காமல் ஒருவர் இறந்து போனார். இப்பொழுது சாந்தன் கல்லீரல் முழுவதும் செயலிழந்து, எழுந்து நிற்கக் கூட முடியாமல் மிக மோசமடைந்து பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவம் ஏதும் பலனளிக்காத நிலையில் இறந்து போயிருக்கிறார். இந்த மரணத்திற்கு யார் பொறுப்பேற்பது..? யாரை நாங்கள் நொந்துக்கொள்வது..?


அனைத்து அடிப்படை உரிமைகளையும் மறுத்து, உடல்நலன் குன்றி “விடுதலை ஆகிவிடுவோம். விடுதலை ஆகிவிடுவோம்.“ என்று கனவு கண்டு விடுதலை ஆகிவிட்டோம் என்று பூரிப்பு கிடைத்த தருவாயில் மீண்டும் ஏமாற்றப்பட்டு சிறைமாற்றப்பட்டு இதனால் மனநலனும் பாதிக்கப்பட்டு இறந்து போன சாந்தனுக்கு சிறை வாழ்வு முடிந்தது. இன்னும் மீதம் மூன்று பேர் இருக்கிறோம். நாங்கள் மீண்டும் காத்திருக்க தொடங்குகிறோம் இந்த சிறப்பு முகாமில்.


சிறையில் கூட சிறை நிர்வாகத்திற்கு சிறை விதிகள் கையேடு இருக்கிறது. அதன்படி கைதிகளுக்கு இருக்கக்கூடிய மற்றும் இல்லாத உரிமைகள் கடமைகள் வரையறுக்கப்பட்டு இருக்கும். ஆனால் சிறப்பு முகாமோ சிறையை விட கொடுமையானது, இங்கு எந்த சட்ட த்திட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும், மாவட்ட ஆட்சியரும், முகாம் நிர்வாகமும் என்ன நினைக்கிறதோ அவை யெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டத் திட்டங்களாகவும் ஆகின்றன. மருத்துவம் கிடையாது என்று இவர்கள் முடிவெடுத்தால் முகாம்வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது. தனிமைச் சிறை என்று இவர்கள் முடிவெடுத்தால் தனிமைச் சிறை யாரும் மனுபார்க்கக் கூடாது என்று இவர்கள் முடிவெடுத்தால் யாரும் மனுப்பார்க்க முடியாது. இப்படியான நிர்வாகம் தான் நாட்டைவிட்டு வெளியில் அனுப்புவதற்காக என்று காரணம் கூறி சிறப்பு முகாமில் அடைக்கப்படுபவர்கள் அதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படாமல் வருடக்கணக்கில் அப்படியே கிடப்பில் போடப்பட்டு இன்னொரு சிறைவாசத்தை அனுபவித்து வருகின்றனர். நாங்கள் சிறு சிறு அடிப்படைத் தேவைகளையும் மற்றும் அடிப்படை உரிமைகளையும் கூட போராடி, உயிரைக் கொடுத்து பெறவேண்டிய சூழலே இருக்கிறது.













எங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியான 32 வருடங்கள் ராஜீவ்காந்தி பெயரைச் சொல்லியே சிறையில் கடத்தப்பட்டது. இறுதியில் உச்சநீதிமன்றத்தின் விடுதலை ஆணைக்கு பின்னும் எங்களை எங்கள் குடும்பங்களோடு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்தி காலங்கடத்தி இறுதியில் சாந்தனை இழந்து நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மீதமுள்ள நாங்களும் எங்களுக்கான ஒவ்வொரு அடிப்படை உரிமையையும் பெறுவதற்கு இதுவரை எண்ணற்ற மனுக்களையும், வழக்குகளையும், உண்ணாநிலை போராட்டங்களையும் மேற்கொண்டே பெற்று வருகின்றோம். அதில் பெரும்பான்மையான வாக்குறுதிகள் காற்றிலே போகும். மீதி, கேட்கப்படாமலே மக்கிப் போகும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், இந்த மாத தொடக்கத்தில் இலங்கை துணைத் தூதரகம் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நானும் முருகனும் உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்ட பொழுது ஒரு வாரத்தில் அழைத்துச் செல்கிறோம் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டு 20 நாட்களை கடந்தும் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இவ்வாறில்லாமல் உரிய அரசுப் பொறிமுறைகள் அவர்கள் கடமையை முறையே செய்திருந்தால் இன்று சாந்தன் உயிருடன் அவருடைய தாயாருடனும் குடும்பத்தினருடனும் மகிழ்ச்சியாக இன்னும் ஓரிரு வருடங்களாவது இருந்திருப்பார்.

> **“இதோ முடியப்போகுது 32 ஆண்டுக்கால சிறைக் காத்திருப்பு என்று எண்ணிய எங்களுக்கு அப்பொழுது விளங்கவில்லை நாங்கள் சிறை மாற்றப்படுகிறோம் என்று. ஆம், அன்று நடந்தேறியது அப்பட்டமான சிறை மாறுதல் தான் என்பதை எங்களுக்கு காலம் தான் விளக்கியது.”**

33 வருடங்களாக தனது மகனை பிரிந்து கண்பார்வை குன்றி வயது முதிர்ச்சியடைந்து கடைசியாக ஒருமுறையாவது தனது மகனை பார்த்துவிடவேண்டும் என்று ஏங்கிய ஒரு தாயின் கையில் அந்த மகனின் உயிரற்ற உடலைத்தான் கொண்டுபோய் சேர்க்கப் போகிறோம். கடைசியாக தனது கையால் தன்மகனுக்கு ஒருபிடி உணவு கொடுக்க மாட்டோமா என்று ஏங்கிய அந்த தாய் அந்தமகனுக்கு கடைசியாகக் வாய்க்கரிசி கொடுக்கத்தான் வாய்க்கப்பட்டிருக்கிறார். இதோ இன்று தன் மகன் வந்துவிடுவான், என்று எதிர்பார்த்து காத்திருந்த அந்தத் தாயிடம் “உன் மகன் வரவில்லை. அவனின் உயிரற்ற உடல்தான் வருகிறது“ என்கிற செய்தியை அந்தத் தாயிடம் யாரால் சொல்லியிருக்க முடியும். அத்தகைய கல்நெஞ்சம் படைத்த மனிதர்களும் இவ்வுலகில் வாழ்கிறார்களா என்ன.!?

33 வருடங்கள் கழித்து தன் மகனின் வருகைக்காக மகிழ்ச்சியாக காத்திருந்திருக்கும் அந்த வீட்டில் இந்த செய்தி ஏற்படுத்திய மயான அமைதியின் பேரிரைச்சலை தாங்கிக் கொள்ளும் கனத்த இதயம் கொண்ட மனி தர்களும் இவ்வுலகில் இருக்கிறார்களா என்ன?

இதோ கடந்த மாதம் என்னுடன் நடந்து மருத்துவ பரிசோதனைக்கு வந்த சாந்தன் இன்று எங்களோடு இல்லை. ஒரு மாதத்தில், எங்களோடு உறவாடி, பேசி உலாவிய சாந்தன் இன்று உயிரோடு இல்லை. மீதமிருக்கிற, ஜெயக்குமாரும் முருகனும் 33 வருடங்களாக தங்கள் குடும்பங்களை பிரிந்து வாடும் நிலையில் நானோ, மனைவி ஒரு நாட்டில் மகன் ஒரு நாட்டில் தாய், சகோதர சகோதரிகள் வேறு நாட்டில் என சிதறுண்டுக் சிதைந்துக் கிடக்கும் குடும்பத்தை ஒன்று சேர்த்து ஒரு நாளேனும் வாழ்ந்து விட மாட்டோமா?!



பச்சிளம் பாலகனாக பார்த்த எனது மகன் எவ்வளவு உயரம் இருப்பான்? அவன் என்னைவிட உயரமா? அல்ல உயரம் குறைவா? அவனுக்கு திருமணம் ஆகி எனக்கு பேரன் பிறந்திருக்கிறானாம்.! நான் எந்த வயதில் என் மகனை பிரிந்தேனோ அந்த வயதில் எனக்கு இப்பொழுது பேரன் இருக்கிறான். அவனதுப் பஞ்சு பாதங்களை அள்ளியெடுத்து ஒருமுறையேனும் என் முத்தங்களை காணிக்கையாக்கிவிட மாட்டேனா..?

அன்பார்ந்த உலகத் தமிழ் சமூகமே இன்னும் நாங்கள் மூன்று பேர் மிச்சம் இருக்கிறோம். எங்கள் நிலைமை?

நீண்டகால சிறைவாசமும், குடும்பங்களை பிரிந்த துயரமும் எங்களை முழுமையான நோயாளிகளாக்கியுள்ளது. சாந்தனைப் போலல்லாமல் எங்களையாவது எங்கள் கடைசி காலத்தில் மிஞ்சியிருக்கிற கொஞ்ச காலம் எங்கள் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்து விட்டுப் போக இந்த அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா..? எங்கள் குடும்பங்களை பிரிந்து வாழ்க்கையை இழந்து வாடும் இப் பெருந்துன்பங்கள் முடிவுக்கு வருமா..?



# உவது ஆண்டில் ரஷ்யா – உக்ரைன் போர்:

## மறைக்கப்பட்ட உண்மையும் திரிபுபட்ட வரலாறும் !

நேட்டோ படைகள் ஆங்காங்கே ரஷ்ய எல்லைகளில் நிறுத்தப்படுவது, ஏவுகணை தளம் அமைப்பது ரஷ்யாவின் பாதுகாப்புப்பு பங்கம் என்பதை ரஷ்ய அரசும்-மக்களும் நீண்ட காலமாக உணர்ந்துள்ளனர். இது ரஷ்யாவை பொருளாதார ரீதியாகவும், அரசியல் - ராணுவ ரீதியாக பலவீனமாக்கும் சவாலை அளிப்பதாகும். இதன் விளைவே இன்றைய ரஷ்யா - உக்ரைன் இடையே நடந்துவரும் போராகும்.

**சோவியத் சிதைவும் நேட்டோ ஆதிக்கமும் :**

தற்போது நேட்டோ ரஷ்யாவை தொடர்ந்து பல வகையிலும் சுற்றி வளைத்து வருகிறது. அதுவே அந்த நாட்டின் பாதுகாப்பு தொடர்பான உண்மையான மற்றும் நியாயமான அக்கறை உள்ளது, அது கவனிக்கப்பட வேண்டும் என்று அதிபர் புட்டின் தன் பல உரைகளில் குறிப்பிட்டுவந்தார்.

மேற்கத்திய நாடுகள் சோவியத் யூனியனின் “இறப்பை“ கண்டு மகிழ்ந்தபோது, மிகைல் கோர்பச்சேவை “மிகப்பெரிய“ அறிவுஜீவியாக உருவாக்கி, பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு அவரை அழைத்து, இறுதியில் சோவியத் யூனியனை சிதைத்ததற்காக அமைதிக்கான நோபல் பரிசை வழங்கினர்.

கம்யூனிசத்தின் முடிவாக, சோவியத் யூனியன் சிதைந்த பிறகு, மேற்கத்திய உலகம் மகிழ்ச்சியடைந்தது மாத்திரமன்றி, அமெரிக்கர்கள் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ரஷ்யாவுக்கு எதிரான செயல்களை செய்ய இலகுவாக முடிந்தது. முன்னர் உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தது மற்றும் பல “குடியரசுகள்“ அதிலிருந்து பிரிந்த பின்னர் 1991 இல் தனி நாடுகளாக பரிணாமம் பெற்றன.

மேற்கத்திய உலகம் சோவியத் யூனியனின் வீழ்ச்சியைக் கொண்டாடியதுடன், உலகம் முழுவதும் கம்யூனிசத்தின் “முடிவு“ என்றும் மேற்குலக நாடுகளும் ஊடகங்களும் கொண்டாடித்தீர்த்தன.

ஆயினும் தற்போதைய மேற்குலகு புட்டினுடன் உடன்படாமல் அவரை இழிவாகப் பார்க்கலாம். ஆனால் அவருடைய தலைமையின் கீழ் ரஷ்யா இப்போது முன்பை விட மிகவும் சக்திவாய்ந்ததாகவும் இருப்பதாகவுமே பல மேற்கத்தய அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா போன்ற முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து தோன்றிய அனைத்து நாடுகளையும் நேட்டோ ஆக்ரோஷமாகப் பின்தொடர்ந்தது. சோவியத் கூட்டணியில் இருந்த மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, போலந்து மற்றும் செக் குடியரசு, ஸ்லோவாக்கியா, பல்கேரியா, ஸ்லோவேனியா போன்ற நாடுகள் நேட்டோவின் ஒரு பகுதியாக மாற்றியது.

**நேட்டோவில் இணையும் உக்ரைன் :**



இந்நிலையில்தான் ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அனைத்து சர்வதேச பேச்சுவார்த்தைகளிலும், நேட்டோ விரிவாக்கம் பற்றிய பிரச்சினை ரஷ்யாவிற்கு உண்மையான கவலையாக இருந்தது. ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் நலன்களைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உரிமை உண்டு.

நேட்டோ படையில் இணைவதற்கு உக்ரைன் முனைப்பு காட்டியது. இதற்கு ரஷ்ய அதிபர் புட்டின் எதிர்ப்பு தெரிவித்துவந்தார். இருப்பினும் அந்த முடிவிலிருந்து பின்வாங்குவதாகத் தெரியவில்லை. இதையடுத்து, ராணுவ நடவடிக்கைக்கு புட்டின் உத்தரவிட்டார். இதை ரஷ்யா ஒரு “சிறப்பு ராணுவ நடவடிக்கை” என்று அழைக்கிறது.

**ஈராண்டை பூர்த்தி செய்யும் போர் :**

ரஷ்யா - உக்ரைன் இடையே நடந்துவரும் போர் ஈராண்டை பூர்த்தி செய்கிறது. 2022 பிப்ரவரி 24 இல் தொடங்கிய போர் தொடர்ந்து நடந்துவருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்க உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் தாராளமாக உதவி செய்துவருவது, ரஷ்யாவை மேலும் எரிச்சலூட்டியது. இதையடுத்து, ரஷ்யா ராணுவ நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தி வருகிறது.

போர் தொடங்கி ஈராண்டு நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையிலும், மேற்கத்திய நாடுகளின் ராணுவ உதவிகள் உக்ரைனுக்கு வந்துசேரும் என்ற காரணத்தினாலும் ரஷ்யாவால் ஒரு பெரிய தாக்குதலைத் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் உக்ரைனும் பதில் தாக்குதலுக்கு திட்டமிட்டுவருகிறது. மறுபுறம் தான் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்ற மேற்கத்திய நாடுகள் வழங்குவதாக அறிவித்த நீண்ட தூரம் சென்று இலக்குகளை தாக்கும் தன்மைகொண்ட ஏவுகணைகள், போர் டாங்கிகள் பெறுவதற்காகக் காத்திருக்கிறது. கிரிமியாவுக்கு நில வழித்தடத்தை விரிவுபடுத்து, விநியோகங்களைத் தொடர ரஷ்யா முயல்கிறது. அத்துடன் ஒரு புதிய ரஷ்ய தாக்குதல் கிழக்கு லுஹான்ஸ்க் பகுதி, டொனெட்ஸ்க் பகுதி, சபோரிஜியா பகுதி, மரியுபோல் நகரம் மற்றும் துறைமுகம் ஆகிய பகுதிகளில் ஏதாவது ஒன்றிலிருந்து வரலாம் என உக்ரைன் ஊகிக்கிறது.

**மேற்கத்திய ஊடகங்களின் ரஷ்ய விரோதப்போக்கு :**

பொதுவாகவே எப்போதும் ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் பரவி அது உலகெங்கும் முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அத்துடன் கீழைத்தேச ஊடகங்களிலும் பரவியுள்ளதை காணலாம். அது மாத்திரமன்றி அமெரிக்கா ஏதோ உலகிற்கு விடுதலை வாங்கித்தர வந்த மீட்பர்கள் போலவும் மேற்கத்திய ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பிரச்சாரம் செய்து வருவதையும் பார்க்கிறோம்.

ஏன் இந்தப் போர் என்பது, எங்கிருந்து இவை தோன்றின என்பதும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். எந்தப் போர் என்றாலும் அது அநாகரிக காட்டுமிராண்டித்தனமானது, இன்றைய உலகம் போருக்கான உலகம் அல்ல. கொரோனா தாக்கத்தின் பின்னரான பொருளாதார சீரழிவிலிருந்து மீள முடியாமல் தனிமனிதர்களும் குடும்பங்களும் ஏழை நாடுகளும் தத்தளித்து வரும் நிலையில் போர் என்பது பெரும் கொடுமை என்பதே உண்மையாகும்.

> **“நேட்டோ படையில் இணைவதற்கு உக்ரைன் முனைப்பு காட்டியது. இதற்கு ரஷ்ய அதிபர் புட்டின் எதிர்ப்பு தெரிவித்துவந்தார். இருப்பினும் அந்த முடிவிலிருந்து பின்வாங்குவதாகத் தெரியவில்லை. இதையடுத்து, ராணுவ நடவடிக்கைக்கு புட்டின் உத்தரவிட்டார். இதை ரஷ்யா ஒரு சிறப்பு ராணுவ நடவடிக்கை’ என்று அழைக்கிறது.”**

சோவியத் யூனியன் சிதைந்த பிறகு, முன்னைய ரஷ்ய அதிபர் பொறிஷ் யெல்சின் காலத்தில் மேற்கத்திய உலகம் மகிழ்ச்சியடைந்தது மாத்திரமன்றி, அமெரிக்கர்கள் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ரஷ்யாவுக்கு எதிரான செயல்களை செய்ய முடிந்ததும் உண்மையே.

**திரிபுபடுத்தப்பட்ட மேற்குலக ஊடகங்கள் :**

உலகை உலுக்கிய செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்க நிதி நிறுவனங்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு, அப்போதைய அதிபர் புஷ், ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தார். ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாத ‘பேரழிவு ஆயுதங்கள்’ என்ற போலிக் காரணத்தின் கீழ் அமெரிக்கர்கள் ஈராக்கில் தலையிட்டனர். அந்த நாடுகள் கண்ட பேரழிவுகள் சொல்லில் அடங்காதவை. ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப்போயுள்ளமையால் இப்போர் பற்றிய திரிபு படுத்தப்பட்ட செய்திகளையேஉலகம் முழுவதுமாக பரப்புகின்றது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# நாடு கடந்த தமிழீழ அரசுடன்

## இலங்கை அரசு பேசுமா?



கடந்த மாவீரர் தினத்தன்று துவாரகா தோன்றி மாவீரர் தின உரையாற்றுகிறார் என்கிற செய்தி துவங்கி, இமாலயப் பிரகடனம் செய்யப்பட்டது என்கின்ற செய்தி வரையில், ஈழத் தமிழ் மக்களை சுற்றி பல சூழ்ச்சிகள் அரங்கேற்றப்படுகின்றன என்பதை உணர முடிகின்றது. ஈழத் தமிழ் மக்கள் தமது விடுதலைக்கும் தாயகத்திற்கும் அதன் உரிமைக்குமாய் போராடிய நிலையில், இனப்படுகொலை என்ற பெருங்காயத் திற்குள் இருந்து மீள முடியாத வலியுடன் இருக்கின்ற காலத்தில், தாயக மக்களிடம் தீர்வு குரிக்கும் நீகி குரிக்கும் பேசாக இலங்கை அரச தலைமை எப்படி புலம்பெயர் தேச அமைப்பு ஒன்றுடன் மாத்திரம் பேசி தீர்வை காணப்போகிறது என்கின்ற அடிப்படைக் கேள்விதான் முதலில் எழுகிறது.

### சாயம் வெளுத்த போலித் துவாரகா

கடந்த பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார், விரைவில் மக்கள் முன் தோன்றுவார் என்ற செய்தி உலகப் பரப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. உலகத் தமிழ் மக்கள் அனைவரது இதயங்களிலும் பெரும் இடத்தை வகிக்கும் உன்னதமான தலைவராக மேதகு பிரபாகரன் இருக்கிறார். அவரின் பெயரை வைத்து ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியலை பின்ன சில நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டன. என்ற போதும் கூட அந்தச் செய்தி வெளியாகிய மறு நிமிடங்களிலேயே அந்த செய்தியின் பின்னால் யார், எந்த நோக்கத்திற்காக செயற்படுகிறார்கள் என்பதை ஈழத் தமிழ் சமூகம் உணரவும் வெளிப்படுத்தவும் தலைப்பட்டது.

இந்த நிலையில் இம்முறை மாவீரர் தினத்தன்று, தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா தோன்றி மாவீரர் தின உரை நிகழ்த்துகிறார் என்கிற செய்தி வெளியாகியிருந்தது. அதேபோல போலித் துவாரகா ஒருவர் யூடியூப் அலைவரிசை ஒன்றின் வழியாகத் தோன்றி மாவீரர் தின உரையை நிகழ்த்துவதாக காண்பிக்கப்பட்டது. உரை வெளியாகிய மறுநிமிடங்களிலேயே அவர் யார்? என்ன நோக்கத்திற்காக வெளிப்பட்டுள்ளார்? யார் அவரை இயக்குவது போன்ற விடயங்கள் ஈழத் தமிழ் சமூகத்தின் ஊடகங்களாலும் ஆய்வாளர்களாலும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் ஒரு சில நாட்களிலேயே போலித் துவாரகாவின் சாயம் வெளுத்து உண்மை அனைவருக்கும் புலப்பட்டது.

### இமாலயப் பிரகடனம்

ஈழத் தமிழ் மக்களின் அரசியலில் இவ்வாறு பல சூழ்ச்சிகள் பின்னப்படும் நிலையில் தான், இமாலயப் பிரகடனம் என்ற ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதுவும் மற்றொரு சூழ்ச்சியா என்ற பார்வையில்தான் ஈழத் தமிழ் மக்கள் சிந்திக்கத் துவங்கியுள்ளார்கள். அதற்கு பல தெளிவான காரணங்களும் காணப்படுகின்றன.

நாட்டில் உள்ள தமிழ் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் சற்றும் மதிக்காமல், அவர்களின் கருத்துக்களை கேட்காமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுகிறோம் என்று கூறிக் கொண்டு இத்தகைய இமாலயப் பிரகடனம் என்ற ஒன்றை முன்னெடுப்பது பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பு பௌத்த குருமார்களுடன் இணைந்து இந்தப் பிரகடனத்தை மேற்கொண்டுள்ளது. அத்துடன் குறித்த பிரகடனம் அதிபர் ரணிலிடம் இரு காப்பும் இணைந்து கையளிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களின் முன்னர் ரணில் தமிழ் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த போது தீர்வு விடயத்தில் எவ்வாறு கடினமாக நடந்து கொண்டார் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதனபோது அவர் தீர்வு விடயத்தில் காட்டிய அசிரத்தையும் கடும்போக்கும் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அவர் கொண்டிருந்த கரிசனையின் உண்மை நிலையைப் புலப்படுத்தியது.

### ஏன் தமிழர்கள் போராடுகின்றனர்...

ஈழத் தமிழ் மக்கள் இழந்த இறைமைக்காக கடந்த எழுபது வருடங்களுக்கு மேலாகப் போராடி வருகின்றனர். அகிம்சை வழியிலான போராட்டத்தை முன்னெடுத்த ஈழத் தமிழ் மக்கள், அந்த அகிம்சைக்கு பதிலாக வன்முறை நிகழ்த்தப்பட்டபோது ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுத்தனர்.

இதனால் ஈழத்தில் முப்பது ஆண்டுகளாக ஆயுதம் ஏந்தி தனிநாட்டுக்கான போராட்டம் இடம்பெற்றது. தனிநாட்டுப் போராட்டம் வழியாக தமிழ் ஈழத்தில் நிழல் அரசொன்று உருவாக்கப்பட்டது. எனினும் அக்கால கட்டங்களிலும் இலங்கை அரசுடன் விட்டுக்கொடுப்புடன் பல கட்டப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு கோரிய அரசியல் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததுடன் அக் கால கட்டங்களிலும் இனவழிப்புப் போரை நடாத்தி முடிப்பதிலேயே இலங்கை அரசு குறியாய் இருந்தது.

இந்த நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையுடன் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. எனினும் தமிழ் ஈழ மக்கள் ஜனநாய வழியில் தேர்தல்கள் வாயிலாக தமது அரசியல் கோரிக்கையை முன்வைக்கத் தயங்கவில்லை. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தேசத்தில் சுயாட்சி என்றும் ஒரு நாட்டிற்குள் இரு தேசங்கள் என்றும் தமிழ் மக்கள் தமது அபிலாசைகளை தேர்தல்கள் வாயிலாக வெளிப்படுத்திருந்தனர். அத்துடன் வடக்கு கிழக்கில் இலங்கை அரசு நடாத்திய பல்வேறு ஆணைக்குழுக்கள், கருத்தறியும் அமர்வுகள் வழியாகவும் தமிழர் தேசக் கோரிக்கையை ஈழமக்கள் வலியுறுத்தியே வந்துள்ளனர்.

### தாய் பகை, குட்டி உறவா...

கடந்த காலத்தில், அதாவது மகிந்த ராஜபக்ச காலத்தில், தமிழீழத்தை கைவிட்டுள்ளோம், தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டுள்ளோம் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு, நீதிமன்றத்தில் சத்தியக்கடதாசி வழியாக தெரிவித்து "கற்பூரத்தில் அடித்து சத்தியம் செய்வதுபோல" செய்த பிறகும் கூட தமிழ் தலைவர்கள், எதைப் பேசினாலும் தனிநாடு கேட்கிறார்கள், தமிழீழம் கேட்கிறார்கள் என்று இலங்கை அரசும், சிங்களப் பேரின வாதிகளும் கூச்சல் போட்டுக் கொண்டு இருந்தார்கள்.

இந்த நிலையில் தாயகத்தில் உள்ள மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் பகையாளிகள் என்ற விதத்தில் அணுகும் இலங்கை அரசு, புலம்பெயர் தேச அமைப்பு ஒன்றுடன் உறவாக இருப்பதே சந்தேகங்களை கிளப்புகிறது. தாயகத்தின் குரலாகவே, புலம்பெயர் தேசம் இருக்கிறது. தாய் நிலத்தில் ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் அடங்காத குரலின் வெளிப்பாடாகவே ஈழ விடுதலையையும் தாயக விடுதலையையும் புலம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தாயக மக்களின் கோரிக்கையை பிரதிபலிக்காத அல்லது கைவிட்ட ஒரு அமைப்புடன் இலங்கை அரசு பேசி தொடர்ந்து ஈழத் தமிழ் மக்களை ஏமாற்ற முயல்கிறது.

உலகத் தமிழர் பேரவையுடன் பேசுகின்ற இலங்கை அரசு, நாடு கடந்த தமிழீழ அமைப்புடன் பேசுமா? அதுவும் ஒரு புலம்பெயர் அமைப்பே. அந்த அமைப்புடன் இணைந்து அரசியலில் ஈடுபடமுடியுமா? தாய் பகை, குட்டி உறவு என்ற அரசியல் வித்தைதான் இங்கு நடக்கிறதா?

புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு ஒரு சமிக்ஞையை காட்டிக் கொண்டு, தாயகத்தில் உள்ள தமிழர்களுடன் தவறான சமிக்ஞைகளை இலங்கை அரசு காட்டுவதாக முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார். தற்போதைய சூழலிலும் கூட தமிழ் மக்கள்மீது தொடர்கின்ற பல உரிமை மீறல்களை சுட்டிக்காட்டியே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அது மாத்திரமின்றி, கடந்த மாவீரர் தினத்தின் போது தாயகத்தில் பல்வேறு அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், இனவழிப்பொன்று கண்ணுக்கு தெரியாமல் தொடரும் சூழலில், இமாலயப் பிரகடனத்தின் வழியாக எஞ்சியுள்ள ஈழத் தமிழ் இனத்தையும் இல்லாமல் செய்ய சூழ்ச்சி செய்கிறதா இலங்கை அரசு என்பதே ஈழத் தமிழ் மக்களின் இன்றைய சந்தேகமாக இருக்கிறது.

# புலிகளை நசுக்குவதற்காகவே ராஜீவ் கொலை வழக்கில் திட்டமிட்டு சிக்கவைத்தார்கள்

## சாந்தனின் இறுதி அஞ்சலியில் முருகன் தெரிவிப்பு

தமிழர்களின் விடுதலைப் போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை நசுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவே எம்மை அந்த வழக்கில் திட்டமிட்டுச் சிக்கவைத்தார்கள் என ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள முருகன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி கற்பகப் பிள்ளையார் ஆலய முன்றிலில் ஊர் பொதுமக்கள் சார்பில் இடம்பெற்ற சாந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வின்போது திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் முருகன் தொலைபேசி வழியாக அனுப்பிவைத்த அஞ்சலி உரை ஒலிபரப்பப்பட்டது. இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாந்தன் உள்ளிட்ட நாம் திட்டமிட்டுச் சிக்கவைக்கப்பட்டோம். அதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்து தமிழர்களது விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் சதிவலை பின்னப்பட்டது.



கடந்த 32 வருடங்கள் உடல், மனரீதியாகப் பலமாக இருந்த சாந்தன் சிறப்பு முகாமில் ஒருவருடம் கூடத் தாக்குப்பிடிக்க முடியாது உயிரிழந்தார். சாந்தனின் உயிர் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டது.

சாந்தனின் உயிர் பறிப்பிற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். ஒட்டுமொத்தத் தமிழர்களும் சாந்தன் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அதன் மூலமே மிச் சமிருக்கும் எங்கள் மூவருக்கும் விடுதலை கிடைக்க வழியேற்படும் - என்றார்.



# சாந்தனின் விடுதலை விவகாரமும்! தாயக அரசியல் தலைவர்களின் பொறுப்பற்றதனமும்!!





சாந்தன் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர். பொதுவாக இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் ஆயுள் தண்டனை எனப்படுவது விடுமுறை நாட்களைக் கழித்து பார்த்தால் 15 ஆண்டுகள்.சிறை, சிறப்பு முகாம் போன்ற இடங்களில் சாந்தன் தடுத்து வைக்கப்பட்டிருந்தது 33 ஆண்டுகள். அப்படிப்பார்த்தால் அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை முடித்துவிட்டார். அதற்கு பின்னரும் அவர் தாயகம் திரும்புவதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள சட்டச் செயற்பாட்டாளர்கள் தமிழக அரசைக் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

இந்த விடயத்தில் தாயகத்தில் உள்ள அரசியல்வாதிகளும் பொறுப்புணர்ந்து செயலபடவில்லை. இந்திய மண்ணில் பாரதூரமான குற்றச்செயல்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள், விடுவிக்கப்பட்ட பின் அவர்கள் இந்தியர்களாக இருந்தால் வீட்டுக்கு போகலாம். வெளிநாட்டவர்களாக இருந்தால் நாடு கடத்தப்படுவார்கள். அல்லது இந்தியாவில் அவர்களைப் பொறுப் பேற்கக்கூடிய உறவினர்கள் இருந்தால் அவர்களிடம் போகலாம்.சாந்தன் தாயகத்துக்கு வர விரும்பினார்.தன் தாயுடன் இறுதிக்காலத்தைக் கழிக்க விரும்பினார். அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையவர்கள் இப்பொழுதும் திருச்சி சிறப்பு முகாமில்தான். தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதலை செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் அவர்களுடைய நாட்டுக்குத் திரும்பும் வரையிலும் அவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

விடுவிக்கப்பட்ட சாந்தன் நாட்டுக்குத் திரும்பினால் இலங்கைச் சட்டங்களின் பிரகாரம் அவருக்கு ஆபத்து ஏற்படுமா என்ற ஒரு பயம் அவருக்காக உழைத்த சட்டச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் காணப்பட்டது.நாட்டிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, உரிய அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக ஒரு பதிலை பெறுவது நல்லது என்றும் அவர்களிற் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றி பெறவில்லை. தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவருக்கு அது தொடர்பாக எழுதப்பட்ட மின்னஞ்சலுக்குப் பதில் கிடைக்கவில்லை. சில அரசியல்வாதிகள் எங்கே, யாரிடம் அதைக் கேட்க வேண்டுமோ அங்கே கேட்காமல், சாந்தனின் வீட்டுக்கு போய் அவருடைய தாயாரைக் கண்டு படமெடுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு சாந்தனை விடுவிப்பதற்கு யாரிடம் கதைக்க வேண்டும்? எங்கே போராட வேண்டும்? என்பது தொடர்பாக தமிழ் அரசியல் சமூகம் தெளிவற்றுக் காணப்பட்டது. அல்லது பொறுப்போடு நடந்து கொள்ளவில்லை. அல்லது மூத்த சட்ட மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரான ஒருவர் கூறுவது போல அதற்கு வேண்டிய அரசியல் பெருவிருப்பம் -political will- அவர்களிடம் இருக்கவில்லை.

திருச்சிசிறப்பு முகாமானது இதற்கு முன்னிருந்த சிறைகளை விடக் கொடுமையானது என்று அங்கு இருப்பவர்கள் கூறுகிறார்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் வியாபாரிகள் சிறப்பு முகாமுக்குள் இருந்த படியே தமது வியாபாரத்தைத் தொடர்ந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.அதன்பின் முகாமில் கட்டுப்பாடுகள் அதிகரித்தன. அது அரசியல் கைதிகளையும் பாதித்தது. சாந்தனைப் போன்றவர்கள் ஏனைய கைதிகளிடமிருந்து பிரிக்கப்பட்டு தனியறைகளில் வைக்கப்பட்டார்கள். சுற்றிவரக் கண்காணிப்பு. உடற் பயிற்சி செய்ய முடியாது. அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட அறைகளோடு கழிப்பறைகளும் இணைக்கப்பட்டிருந்தபடியால் வெளியே நடமாடுவதற்கும் வரையறைகள் இருந்தன. சிறைக்குள் சாந்தன் பெருமளவுக்கு ஒரு சன்னியாசி போலாகிவிட்டார் என்று வழக்கறிஞர் ஒருவர் சொன்னார். பெருமளவுக்குத் தனித்திருப்பதாகவும் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவர் போல காணப்பட்டதாகவும் அவர் சொன்னார். சிறப்பு முகாமில் அவர் சோறு சாப்பிடாமல் கஞ்சி மட்டும் தருமாறு கேட்பதாகவும் கூறப்பட்டது. சிறப்பு முகாமும் சாந்தனின் உடல் கெடுவதற்கு ஒரு காரணம். முடிவில் அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் ஒரு நிலை வந்த பொழுது மீண்டும் அவரது குடும்பத்தவர்கள் தமிழ்த் தேசிய அரசியற் சமூகத்தை அணுகினார்கள்.

அப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியற் சமூகம் அதே மந்தத்தனத்தோடு பொறுப்பின்றி நடந்து கொண்டது.சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பான முடிவை இலங்கையில் எடுக்க வேண்டியது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும்தான். சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடு மிகவும் பிந்தித்தான், அதாவது அவர் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு கிட்டத்தட்ட 14 மாதங்களின் பின்னர் அதிலும் குறிப்பாக அவர் இறப்பதற்குச் சில கிழமைகளுக்கு முன்புதான் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த விடயத்தில் ஜனாதிபதியை, வெளி விவகார அமைச்சரை அணுகிய அதே காலப்பகுதியில் சாந்தனின் குடும்பத்தவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியிருக்கிறார்கள். மற்றொரு யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினராகிய அங்கஜனும் அதில் அக்கறை காட்டியிருக்கிறார். அதாவது சாந்தனின் விடயத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அதற்கு வெளியே உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரும் அரசாங்கத்தை அணுகியதன் விளைவாகத்தான் நாடு திரும்புவதில் சாந்தனுக்கு இருந்த தடைகள் அகற்றப்பட்டன.

ஆனால்.அப்பொழுது எல்லாமே பிந்திவிட்டது. விமானத்தில் பயணம் செய்ய முடியாத அளவுக்கு சாந்தன் நோயாளியாகி விட்டார் என்று ராஜீவ் காந்தி மருத்துவமனையின் நிர்வாகி ஒரு வழக்கறிஞரிடம் கூறியுள்ளார். முடிவில், சாந்தனின் உயிரற்ற உடலைத்தான் அவருடைய தாய்க்குக் காட்ட முடிந்தது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் அவர் ஒரு கைதியாகவே இறந்தார். உயிருடன் இருக்கும் போது அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை அனுபவித்தார். உயிர் பிரிந்தபின் அவருடைய உடலை இந்தியாவிலும் பின்னர் இலங்கையிலும் இரண்டு தடவைகள் பிரேத பரிசோதனை செய்திருக்கிறார்கள்.

சாந்தனுக்காக தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் சமூகம் பெரிய அளவில் போராடவில்லை.இப்பொழுதும் சிறப்பு முகாம்களில் இருப்பவர்களை விடுதலை செய்யவதற்காக யார் போராடுகிறார்கள்? சாந்தனோடு சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜையாகிய பேரறிவாளனை விடுவிப்பதற்காக அவருடைய தாயார் அற்புதம்மாள் தொடர்ச்சியாகப் போராடினார். ஒரு தாயின் நிகரற்ற போராட்டங்களில் அதுவும் ஒன்று. கிழக்கில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த அன்னை பூபதியின் போராட்டத்தைப்போல அது முன்னுதாரணமானது. ஈழத் தமிழ் அரசியலில் தாயக களத்துக்கு வெளியே நடந்த ஓர் அன்னையின் மகத்தான போராட்டமாக அற்புதம்மாளின் 32 ஆண்டுகாலப் போராட்டம் காணப்பட்டது.

சாந்தனை விடுவிப்பதற்காக அல்லது நாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தமிழ் அரசியல் சமூகம் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய போராட்டம் எதையும் முன்னெடுத்திருக்கவில்லை. அது மட்டுமல்ல, சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதிலும் தமிழ் அரசியல்வாதிகளிடம் பொருத்தமான அணுகுமுறைகள் இருக்கவில்லை. சாந்தனின் குடும்பம் சலிப்படைந்து, களைப்படைந்து, ஒரு விதத்தில் விரக்தியடைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கிப் போனது. ஆனால் தமிழ் தேசியக் கட்சிகள் தங்கள் சொந்தக் கட்சிக்குள் பதவிப் போட்டி என்று வரும் பொழுது எப்படியெல்லாம் போராடுகிறார்கள்? கடந்த வாரம் தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமைகளை நிரூபித்த ஒரு வாரம். முதலாவது சாந்தனின் மரணம். இரண்டாவது தமிழரசுக் கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை.

அங்கே அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்தார்களா? இல்லையா? என்பது வேறு கதை. கட்சிக்குள் வந்த பிணக்கை கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியவில்லை என்பது ஒரு பாரதூரமான தோல்வி. அதனைத் தீர்ப்பதற்கு கட்சிக்கு வெளியேயும் சிவில் சமூகங்கள் இல்லை என்பது மற்றொரு தோல்வி. கடந்த 15 ஆண்டு காலத் தோல்விகளுக்கு அந்தக் கட்சி பொறுப்பு என்ற படியால் அது அழியட்டும்அதன் வாக்குகள் தென்னிலங்கைக் கட்சிகளுக்குப் போனாலும்கூட பரவாயில்லை என்று கருதுமளவுக்கு சில சிவில் சமூகப் பிரதிநிதிகள் காணப்படுகிறார்கள் என்பது அதைவிடத் தோல்வி.


இது ஒரு தேர்தல் ஆண்டு.ஜனாதிபதித் தேர்தலில் தற்போதுள்ள நிலவரங்களின்படி அரச தரப்புஎதிர்க்கட்சி ஜே.வி.பி என்று மூன்று அணிகள் போட்டியிடக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. தென்னிலங்கையில் படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் ஜே.வி.பி ஆதரவு அலை ஒன்று வீசுகிறது. அது வாக்குகளாக மாறுமா? இல்லையா? அல்லது அதை கண்டு பயந்து ஏனைய வலதுசாரிக் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியத்துக்கு போகுமா? இல்லையா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

மேற்கூறிய மூன்று தரப்புக்களும் போட்டியிட்டால்,சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாகப் பிரியும்.அப்பொழுது தமிழ்த் தரப்பு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மேலெழக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். ஆனால் அவ்வாறு அரசியல் களத்தில் துணிந்து புகுந்து விளையாடுவதற்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளதில் பெரிய கட்சி நீதிமன்றம் ஏறத் தொடங்கிவிட்டது. மற்றொரு கட்சி தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்து விட்டது. அதாவது துணிந்து புகுந்து விளையாடத் தயாரில்லை. ஒரு பொது வேட்பாளரை நிறுத்தப் போவதாகக் கூறிய குத்துவிளக்குக் கூட்டணி அதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறதே தவிர செயல்படுவதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் குத்துவிளக்குக் கூட்டணி அந்தப் பரிசோதனையில் இறங்குமா?

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெல்லப்போகும் கட்சி அல்லது கூட்டு, அடுத்த ஆண்டு அனேகமாக பொது தேர்தலை வைக்கும். தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல்,உள்ளூராட்சி சபைத் தேர்தல் போன்றன வைக்கப்படலாம்.அதாவது வரும் இரண்டு ஆண்டுகளும் தேர்தல் ஆண்டுகளாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மக்கள் இயக்கம் எதுவும் இல்லை. இருப்பதெல்லாம் தேர்தல் கேட்கும் கட்சிகள்தான். அடுத்தடுத்து வரும் இரு தேர்தல் ஆண்டுகளை எதிர்கொள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளிடம் என்ன உபாயம் உண்டு? நிர்ணயகரமான ஒரு காலகட்டத்தில், அரங்கில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தரப்புக்களை இந்தியாவும் அமெரிக்காவும் ஏனைய பேரரசுகளும் அணுகிக்கையாள முற்படும் ஒரு காலகட்டத்தில், அரங்கில் துணிந்து புகுந்து விளையாட வேண்டிய தமிழ்த்தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

அரசியலில் துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் தைரியமான முடிவுகளை எடுக்கும். அவ்வாறான முடிவுகளை எடுக்கும் தரப்புகள்தான் கனவுகளை நோக்கிய தார்த்தத்தை வளைக்கும். தலைமை தாங்கும். துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் வரலாற்றை உருவாக்குகின்றன. உட்கட்சிச் சண்டையை நீதிமன்றத்துக்கு கொண்டு போகும் கட்சிகள் வரலாற்றை உருவாக்குவதில்லை. அதுமட்டுமல்ல தேர்தல் வரும்பொழுது தமிழ்த் திரைப்படங்களில் கடைசி நேரத்தில் விசிலடித்துக் கொண்டு வரும் போலீஸ் போல அறிக்கைவிடும் சிவில் சமூகங்களும் வரலாறைத் தீர்மானிப்பதில்லை.

நிலாந்தன்





# எழுதித்தீரா ஈழத்தின் தியாக வரலாற்றில் 'சாந்தன்': சிறீதரனின் உருக்கமான பதிவு

“இதுவரை எழுதித்தீரா ஈழத்தின் தியாக வரலாற்றில் "சாந்தன்" என்னும் இன்னுமொரு உயிர் சருகாகியிருக்கிறது.” என தமிழரசுகட்சியின் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி சிறப்பு அகதி முகாமிலிருந்த சாந்தன் 28ம் திகதி தமிழகத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரின் உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரின் மரணத்திற்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழரசுகட்சியின் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சிவஞானம் சிறீதரன் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், “இதுவரை எழுதித்தீரா ஈழத்தின் தியாக வரலாற்றில் "சாந்தன்" என்னும் இன்னுமொரு உயிர் சருகாகியிருக்கிறது.

தாயகக் கனவைச் சுமந்து, தனது இருபது வயதில் தாய்நிலம் பெயர்ந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்டு 33 ஆண்டுகள் சிறைமீளப் போராடி, விடுதலையான பின்னரான இறுதி ஒன்றரை ஆண்டுகள் தாய்நிலம் திரும்பப் போராடி, அந்த ஏக்கம் தீராமலேயே உயிரிழந்திருக்கிற செய்தி, அத்தனை தமிழர்களையும் உறையவைத்திருக்கிறது.

இருபது வயது இளைஞனாக சிறைசென்ற தன்மகன், என்றோ ஓர் நாள் தாய்மடி சேர்வான் என்ற, சாந்தனின் தாயாரின் 33 வருடக் காத்திருப்பு பொய்த்துப்போய்விட்டது என்பதைத்தான் அத்தனை இலகுவாக எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

தன் இளமைக்காலக் கனவுகளையும், வாழ்வையும் சிறையறைக்குள் குறுக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தின் நீட்சியில், கடந்த 2022.11.11 ஆம் திகதி இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதன் பின்னரான இந்த ஒன்றரை ஆண்டுகளில், தாய் முகம் காணவும் தாயகம் சேரவும் எடுக்கப்பட்ட அத்தனை முயற்சிகளும் பயனற்றுப் போய், உயிரற்ற உடலமாய் சாந்தன் நாடு திரும்பும் நிலை ஏற்பட்டமை நான் உட்பட, ஒரு இனமாக எம் ஒவ்வொருவரையும் இயலாமையின் விளிம்பில் கூனிக்குறுகி நிற்க வைத்திருக்கிறது.

இந்த இறுதிநாட்களில் எது நிகழக்கூடாது என நினைத்தோமோ அந்தக் கொடுந்துயர் நிகழ்ந்திருக்கிறது. தன் ஆயுளின் அரை வாழ்நாளை மகனுக்கான காத்திருப்பிலேயே கழித்த ஒருதாயின் கனவு கானல் நீராகக் கலைத்துப் போடப்பட்டிருக்கிறது.

அந்தத்தாயின் கண்ணீரின் கனதி, இது இரங்கலோடு கடந்துசெல்லும் இறப்புச் சம்பவமல்ல என்பதை வரலாறு தோறும் எங்களுக்கு இடித்துரைத்த வண்ணமே இருக்கும். ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக, எனது தனிப்பட்ட மற்றும் பதவிநிலை இயலுமைகளின் எல்லா எல்லைகளைக் கடந்தும் சாந்தனின் விடுதலைக்கான சில முயற்சிகளை, பல அழுத்தங்களை நானும் முன்னெடுத்திருந்தேன்.

பலதரப்பு அழுத்தங்கள், கோரிக்கைகள் எல்லாவற்றினதும் கூட்டிணைந்த வடிவமாக இருநாட்டு சட்ட நடைமுறைகளின் நெடு நாளைய இழுபறி நிலைக்குப் பின்னர், நாடு திரும்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு, பயண ஒழுங்குகளும் திட்டமிடப்பட்டு எல்லோரது வேண்டுதல்களும் கைகூடவிருந்த கடைசித் தருணத்தில் சாந்தனின் இறப்பு நேர்ந்திருக்கிறது.

எந்தச் சமரசங்களுக்கும் உட்படுத்த முடியாத வகையில், ஈழத்தமிழினத்தின் ஏதிலித்தனமும், அதிகாரமற்ற கையறுநிலையும், சாமான்யர்களின் உணர்வுகளை உணரத்தலைப்படாத அரசபீடங்களின் அசமந்தப்போக்கும், விடுதலை வேண்டிய எங்கள் இனத்தின் விடுதலைப் போராளியை காந்திய தேசத்தில் காவு வாங்கியிருக்கிறது.

இந்தக் கொடுந்துயரின் வலி சாந்தனின் குடும்பத்துக்கு வாழ்நாள் வலி என்றபோதும், இழப்பின் ரணங்களைச் சுமந்தவர்களாகவேனும் சாந்தனின் தாயார், தம்பி மதிசுதா உள்ளிட்ட சகோதரர்கள், உறவுகள் அனைவரும் இந்தக் கொடும் வலியின் வாதையிலிருந்து மெல்ல மெல்ல மீள, வல்ல இயற்கை வழிசெய்யட்டும். கனத்த இதயத்தோடு மாவீரன் சாந்தனுக்கு எம் புகழ் வணக்கம். ”என குறிப்பிட்டுள்ளார்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி: நிதியின்றி அகழ்வுப் பணி மீண்டும் ஒத்திவைப்பு!



போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வன்னியின் கொக்குத்தொடுவாய் பகுதியில் எட்டு மாதங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியில் அகழ்வுப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நிதியில்லை என மாவட்டத்தின் பிரதான அரச பிரதிநிதியால் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் இதுவரை நிதியை விடுவிக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம் மார்ச் 04 நீதிமன்றில் அறிவித்ததாக சட்டத்தரணி வீ. எஸ். நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் நிதியை விடுவிப்பதை தொடர்ந்து தாமதப்படுத்தி வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் நீதிமன்றில் சுட்டிக்காட்டியதாக சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி தொடர்பான வழக்கு மார்ச் 04 முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையில், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர் மற்றும் வீ.எஸ். நிரஞ்சன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவும் முன்னிலையாகியிருந்தனர்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளுக்கு சுமார் 5.7 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு உறுதிப்படுத்தியிருந்தது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக கணக்காளர், 2023ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் “கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து நீதவான் விசாரணைக்கான மதிப்பீடு” என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட கடிதத்தில், 5,663,480.00 இலட்சம் ரூபா ஒதுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி தற்காலிகமாக அகழ்வுப் பணிகள் ஒத்திவைக்கப்பட்டபோது, சுமார் 2.5 மில்லியன் ரூபாய் நிதி எஞ்சியிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்திருந்தார்.

புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி 2023 நவம்பர் 29ஆம் திகதி ஒன்பதாவது நாளாக மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்ட போது புதைகுழியில் இருந்து குறைந்தது 40 பேரின் எச்சங்கங்கள் மீட்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில் நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய் பதிக்க நிலத்தை தோண்டும் வேளையில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைகளின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கு 5000 தபால் கடிதங்கள்

”எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள்” எனும் தொனிப்பொருளில் நிலத்தை இழந்த மக்களின் குரல் அமைப்பின் ஊடாக வட மாகாண ரீதியாக இராணுவம். கடற்படை மற்றும் ஏனைய திணைக்களம் வசம் இருக்கும் மக்களின் காணிகளை விடுவிக்க கோரி தபால் மூலம் ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்கும் நிகழ்வு திங்களன்று மன்னாரில் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாண ரீதியாக மக்களின் காணிகளை அரசாங்கம் மற்றும் முப்படையினர் கையகப்படுத்தி குறித்த காணிகளில் வணிக செயற்பாடுகள் மற்றும் விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் காணிக்கு சொந்தக்காரரான மக்கள் காணிகள் இன்றியும் வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

இதன் அடிப்படையில் மக்களின் காணிகளில் குடியிருக்கும் படையினர் காணிகளை மக்களுக்கு விடுவித்து வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் காரியாலயத்திற்கு ஐயாயிரம் தபால் கடிதங்கள் அனுப்பி வைக்கும் முகமாக குறித்த நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றது.



# கைது முதல் இறப்பு வரை சாந்தன் கடந்து வந்த பாதை

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறை தண்டனை பெற்று விடுதலை ஆகியிருந்த ஏழு பேரில், சாந்தன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சாந்தன். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், சாந்தனும் விடுதலை பெற்றிருந்தார். தொடர்ந்து அவர் உடல் நலக் குறைவு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் உயிரிழந்திருந்தார்.




இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட சாந்தன் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு கிட்டத்தட்ட 30 வருடம் சிறையில் இருந்தார். கடந்த 2022 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் 7 பேரையும் விடுதலை செய்திருந்தது. இவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் திருச்சி மத்திய சிறையில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். அகதிகள் முகாமில் சிறப்பு வசதிகள் ஏதுமில்லை, நடைப்பயிற்சி செய்ய முடியவில்லை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை சாந்தன் தரப்பு தெரிவித்திருந்தது. இந்த நிலையில், அவர் உடல்நலக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், உயிரிழந்தது பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இதுகுறித்து சாந்தனின் வழக்கறிஞர் புகழேந்தி குறிப்பிடுகையில், “ராஜீவ் கொலை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட்ட பின்னரும் அவர் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார். இலங்கைக்கு அனுப்புவோம் என்று சொல்லி இருந்தார்கள். ஆனால் கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு மேலாகியும் அனுப்பப்படவில்லை. இந்நிலையில் முகாமில் சரியான வசதிகள் இல்லாததாலும், மருத்துவ வசதி இல்லாததாலும் கல்லீரல் பாதிப்பு ஏற்பட்டது. கடந்த ஒரு மாதமாக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணம் அடைந்துள்ளார். இரவு அவர் ஏர் ஆம்புலன்ஸ் மூலம் இலங்கைக்கு செல்வதாக இருந்தது. இதற்கிடையில் இவர் உயிரிழந்துள்ளார்““ என்றார்.

1991 மே 21 ஸ்ரீபெரும்புதூரில் நிகழ்ந்த ராஜீவ் காந்தி கொலை சம்பவத்தில் ஒவ்வொருவராக கைது செய்யப்பட்ட நிலையில், 1991 ஜீலை 22 ஆம் தேதி சாந்தன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட 26 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வந்த நிலையில், 1998 ஜனவரி 28 ஆம் தேதி, 26 பேருக்கும் தூக்கு தண்டனை வழங்கியது பூந்தமல்லி தடா நீதிமன்றம்.


அதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு மே 11 தேதி 26 பேரில் 19 பேர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்கு பேருக்கு தூக்கு உறுதி செய்யப்பட்டது. 1999 அக்டோபர் 8 ஆம் தேதி தூக்கு தண்டனையை குறைக்கக் கோரிய சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 1999 அக்டோபர் 10ஆம் தேதி நால்வரும் ஆளுநருக்கு கருணை மனு அனுப்பினர். 1999 அக்டோபர் 29ஆம் தேதி அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவி கருணை மனுக்களை தள்ளுபடி செய்தார்.

1999 நவம்பர் 25 ஆம் தேதி ஆளுநரின் உத்தரவை ரத்து செய்து அமைச்சரவை முடிவு மீது ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று உத்தரவு கொடுக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதி நளினியின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆனால் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்கு தண்டனை ரத்து செய்யப்படவில்லை.

2000 ஏப்ரல் 26ஆம் தேதி பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட மூவரும் குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பினர். குடியரசுத் தலவர்களாக இருந்த கே. ஆர்.நாராயணன் அவருக்குப் பிறகு வந்த ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஆகியோர் கருணை மனுக்களின் மீது முடிவு எடுக்காமல் கிடப்பில் போட்டனர். அதனைத் தொடர்ந்து குடியரசுத் தலைவராக இருந்த பிரதீபா பாட்டீல் 2011 ஆகஸ்ட் 12ஆம் தேதி கருணை மனுக்களை தள்ளுபடி செய்து அறிவிப்பு வெளியிட்டார். அதன் விளைவாக தமிழ்நாட்டில் அதனைக் கண்டித்து பல்வேறு போராட்டங்கள் நடந்தது.

பின்னர் தூக்கு தண்டனை அளிக்கப்பட்ட மூவரும் சேர்ந்து, தாங்கள் அதிக வருடங்கள் சிறையில் கழித்துவிட்டோம் என்று, தூக்கு தண்டனையை ரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இதில் 2014 பிப்ரவரி 18ஆம் தேதி பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட மூன்று பேரின் தூக்கு தண்டனையை ரத்து செய்து சதாசிவம் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்தது.

2014 பிப்ரவரி 19ஆம் தேதி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிக்கிய கைதிகள் விடுதலை என ஜெயலலிதா அறிவித்திருந்தார். குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி சிபிஐ விசாரித்த வழக்குகளில் எடுக்கும் முடிவை மத்திய அரசுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று கூறி, மத்திய அரசுக்கு தெரிவித்த போது, அப்போது இருந்த காங்கிரஸ் அரசு உச்ச நீதிமன்றத்தை நாடி விடுதலைக்குத் தடை பெற்றது. பின்னர் நடைபெற்ற அந்த வழக்கில், 2015 டிசம்பர் 2 மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் அவர்களை விடுவிக்க முடியாது என நீதிபதி இப்ராஹீம் கலிபுல்லா அமர்வு தீர்ப்பளித்தது.2016 மார்ச் 2 ஆம் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரை விடு



விக்கக் கோரி மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியிருந்தது. 2018 மார்ச் 6, 7 பேரை விடுவிப்பு தொடர்பாக ஆளுநர் முடிவெடுக்கலாம் என ரஞ்சன் கோகாய் அமர்வு தீர்ப்பளித்தது. 2018 டிசம்பர் 6ஆம் தேதி 161 சட்ட விதிப்படி ஆளுநர் இறுதி முடிவு எடுக்க உச்சநீதிமன்றம் அதிகாரம் வழங்கியது.

அதனைத் தொடர்ந்து பேரறிவாளன் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நிலையில் சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் தேதி விடுதலை



செய்யப்பட்டனர். இருப்பினும் அவர்களில் பேரறிவாளனைத் தவிர மற்றவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர். வரலாற்றில் இடம்பிடித்த துயர சம்பவமான ராஜீவ் கொலை வழக்கில், கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 7 பேரில், சாந்தன் சொந்த நாடு திரும்பாமலேயே உயிரிழந்துள்ளார்.

நக்கீரன்

## குமரப்பா, திலீபன், கிட்டு தொடக்கம்

**நிகழ்வு-01, 1987 செப்டெம்பர்**

நல்லூரில் திலீபனின் விரதம் நடந்து கொண்டிருந்தது நான் சென்று அவரை சந் திக்க முயன்றேன். நீங்கள் அங்கு வந்தால், பிரச்சினையை உருவாக்கும் அளவுக்கு, மக்கள் உணர்ச்சி மேலீட்டில் இருக்கிறார்கள் என்று புலிகளின் தலைவர்கள் என்னிடம் சொன்னார்கள். என்னை அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு, உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டதை, அவரிடம் கூறினார்கள் அவர் எப்படி கைவிடுவார்? இந்தியப் பிரதமர் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றாத வரை நான் கைவிடமாட்டேன் என்றார்.

நான் இந்திய உயர்ஸ்தானிகர் ஜே.என் தீட்சித்திடம், அவரை வந்து சந்தியுங்கள். சந்தியுங்கள் என்று பலமுறை கேட்டுக் கொண்டேன் அவர் இழுத்தடித்தார் தாமதப்படுத்தினார். வரவில்லை. கடைசியில் அந்த மனிதர் ( திலீபன்) இறந்தபோது, அவர் வந்தார் அவருடைய உயிரை ஒரு உயிரை நாம் காப்பாற்றியிருக்க வேண்டும். 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம், rediff.com இற்கு அளித்த செவ்வியில், இதனைக் கூறியிருந்தார். இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதிப்படையின் முதலாவது தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கிரட் சிங்

**நிகழ்வு -2 1987 ஆகஸ்ட்**

இந்திய அமைதிப்படையிடம் ஆயுதங்களை கையளிக்க புலிகள் இணங்கியி ருந்தனர். பிரபாகரனின் பிரதிநிதியாக, அப்போது அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த யோகி தனது கைத்துப்பாக்கியை இந்திய அமைதிப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கிரட் சிங் முன்னிலையில், ஒப்படைத்தார் ஒரு பக்கத்தில் புலிகளிடம் ஆயுதங்களை களைந்து கொண்டு, மறுபக்கத்தில் புலிக ளுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எவ்.எவ் அமைப்புக்கு ஆயுதங்களைக் கொடுத்துப் பலப்படுத்திக் கொண்டிருந்தது இந்தியா இது குறித்து மேஜர் ஜெனரல் ஹர்கிரட் சிங் தனது செவ்வியில் விபரித்திருக்கிறார்.

ஈபி ஆர் எல் எப். க்கு ஆயுதம் கொடுப்பதை அவர்கள் நிறுத்தவில்லை. றோ (RAW) அதனைச் செய்து கொண்டிருந்தது இந்திய வெளியுறவு அமைச்சுக்கும் அது பற்றித் தெரியும் டிக்ஷித்துக்கும் அது தெரியும் ஆனால் அவர்களால் அதைத் தடுக்க முடி யவில்லை. இதன் விளைவாக ஆகஸ்ட் 21 ஆம் திகதிக்குள் ஆயுதங்களை ஒப்படைப் பது நிறுத்தப்பட்டது ஈபி ஆர்.எல்.எப் ஆயுதம் ஏந்துவதாக போது, எதிர் விளை இருக்கவில்லை -இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர்ஜி எதுவும் பேசவில்லை." என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

**நிகழ்வு -3. 1987 ஒக்டோபர்**

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 17 புலிகள் கடல் புறா என்ற படகுடன், இலங்கை கடற் படையினரால் கைது செய்யப்பட்டு, பலா லிக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்திய அமைதிப்படையே தங்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பு என புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், சுதுமலையில் அறிவித்து விட்டே, ஆயுதங்களை ஒப்படைக்க சம்மதித்திருந்தார் எனவே, கைது செய்யப்பட்ட புலிகளின் பாதுகாப்பை இந்திய அமைதிப்படை உறுதி செய்ய வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தினர் பலாலி படைத்தளத்துக்கு கொண்டு செல்லப்பட்ட புலிகளைச் சுற்றி இந்திய அமைதிப் படையினர் நின்று கொண்டிருந் தனர். அவர்களைச் சுற்றி இலங்கை இராணுவம் அவர்களை சுற்றி இந்திய படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். அதாவது புலிகளைச் சுற்றி மூன்று வளையங்கள்.

கைது செய்யப்பட்ட புலிகளை கொழும் புக்கு கொண்டு வருமாறு, அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன உத்தரவிட் டிருந்தார். அவ்வாறு கொண்டு செல்லப்பட்டால் தங்களின் போராளிகள் சித்திரவதை செய்யப்படுவார்கள் என்றும், அதனை தடுக்க வேண்டியது இந்தியாவின் பொறுப்பு என்றும் புலிகள் வாதிட்டனர் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் புது டில்லிக்கும் இடையில் பேச் சுக்கள் நடந்து கொண்டிருந்தன.

இந்தச் சூழலில் என்ன நடந்தது என்று. rediff.com இற்கு அளித்த செவ்வியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் மேஜர் ஜெனால் ஹர்கிரட் சிங் நான் விமான நிலையத்தில் காத்துக் கொருந்தேன்ல ஜென டிபிந்தர் சிங் டிக்ஷித் மற்றும் சில அதிகாரிகள் வந்தனர். அவர்களால் ஜயவர்தனவை சமாதானப்படுத்த முடியவில்லை.

மறுநாள் ஜெனரல் டிபிந்தர் சிங் திருகோணமலைக்கு வந்து அவர்களை ஒப்படைத்து விடுங்கள், அவர்கள் போகட்டும். அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்"என்று சொன்னார். பிற்பகல் 2 மணியளவில் சென்னையில் உள்ள படைத் தலைமையகத்திலிருந்து எனக்கு ஒரு செய்தி வந்தது. இந்திய அமைதிப்படையின் கட்டளைப் பணியகம் ஏன் இலங்கையின் அரசியல மைப்பு நடவடிக்கைகளில் தலையிடுகிறது? தயவு செய்து யாழ்ப்பாணத்தில் உங்கள் முற்றுகையை நீக்குங்கள், அவர்கள் விரும்பி யதைச் செய்யட்டும். என்று அதில் கூறப்பட்டிருந்தது. நான் வருத்தப்பட்டேன். நான் திருகோணமலையில் இருந்தேன், அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள் எனது கேணல் ஜி.எஸ்.ஹோஷியார் சிங்கிடம் பேசினேன். எமது படையினர் பின்வாங்கினார்கள், புலிகள் சயனைட்டை அருந்தினர் மென்றவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

இது இந்திய, இலங்கை அமைப்பில் குழப்பத்தை ஏற்படுத்தியது. இந்திய இரா ணுவத்தால் அவர்களை காப்பாற்ற முடியவில்லை இந்த இரண்டு சம்பவங்களும் நடைபெறுவதற்கு முன்னர், இந்தியா காப்பாற்றும்,பாது காக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் காணப்பட்டது. திலீபனின் மரணம்,குமரப்பா புலெந்திரன் உள்ளிட்ட 12 புலிகளின் மரணம் என்பன. இந்தியா காப்பாற்றாது என்ற உண்மையை தமிழ் மக்களுக்கு உணர வைத்தது. இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதியாக இருந்த, லெப் ஜெனரல் டிபிந்தர் சிங் தான், இந்திய அமைதிப்படையின் முழு நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்தார். அவர் கடந்த ஆண்டு ஒரு செவ்வியில், புலிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி ஆயு தங்களை களைந்து விட்டு அவர்களை செய லிழக்கச் செய்ய இந்திய அரசு திட்டமிட்டி ருந்தது என்று கூறியிருந்தார்.

ஆயுதங்களைப் பறித்து விட்டு தம்மை கொலை செய்ய இந்தியா திட்டமிட்டுள்ள தாக பிரபாகரன் தன்னிடம் கூறினார் என்றும், அதனை டில்லியில் உள்ள அதிகாரிகள் மறுத்தனர் என்றும், ஆனால் பிரபாகரன் கூறியது தான் சரி என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அவர் இந்தியப் படையினரை ஆரத் தழுவி வரவேற்ற இலங்கைத் தமி ழர்கள் அவர்களுக்கு எதிராகத் திரும்பிய தற்கு காரணமே இந்தியாவின் துரோகம் தான் என்றும் ஜெனரல் டிபிந்தர் சிங் தெரிவித்திருந்தார். ஆயுத ஒப்படைப்புக்கு பிரபா கரனுடனும், மாத்தயாவுடனும் பேச்சுக்களை நடத்தியவர் மேஜர் ஜெனரல் ஹர்கிரட் சிங்.

ஒரு கட்டத்தில், அவர்கள் இருவரையும் சுட்டுக் கொன்று விடுமாறு இந்தியத் தூதுவர் டிக்ஷித் தனக்கு உத்தரவிட்டார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் அதனை டிக்ஷித் பின்னர் மறுத்ததுடன், அவ்வாறு உத்தரவிடும் அதிகாரம் தனக்கு இருக்கவில்லை என்றும் கூறியிருந்தார். எவ்வாறாயினும், இந்திய அமைதிப் படையின் வருகையும், அதனைச் சார்ந்து இடம்பெற்ற நிகழ்வுகளும், இந்தியா தொடர்பான கசப்பான அனுபவங்களையே தமிழ் மக்களுக்குக் கொடுத்தது. அந்த அனுபவத்தின் தொடர்ச்சியாகத் தான் ராஜீவ்காந்தி படுகொலையும் இடம்பெற்றது. அந்தச் சம்பவம் ஒரு துன்பியல் நிகழ்வு என்பதை பிரபாகரன் கிளிநொச்சி செய்தியாளர் சந்திப்பில் ஒப்புக் கொண்டி ருந்தார். ராஜீவ் காந்தி கொலைக்கு பின்னர் அல்ல, அதற்கு முன்னரே இந்தியாவின்அணுகுமுறை தமிழர்களை ஏமாற்றுவதாகத் தான் இருந்து வந்தது.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் அந்த அணுகுமுறை இன்னும் மோசமானதாக மாறியது. அதன் தொடர்ச்சிதான் சாந்தனின் மரணம்.

**நிகழ்வு -4, 2024 பெப்ரவரி**

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சாந்தனுக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் மேன்முறையீட்டில் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டிருந்த அவர், பலத்த சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு இந்திய உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

ஆனாலும் அவர் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார். தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு தொடர்ச்சியாக அவர் விடுத்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. அதற்காக மீண்டும் சட்டப் போராட்டம் நடத்தும் நிலை ஏற்பட்டது. அதற்குள் அவர் உடல்நிலை பாதிக்கப் பட்டது. ஒரு பக்கம் சட்டப் போராட்டம். இன்னொரு பக்கம் உயிருக்கான ஊசலாட்டம். இரண்டுக்கும் நடுவே சாந்தன். மகனைக் காண தாய்க்கு அனுமதியில்லை. தாயைக் காண மகனுக்கு வழியில்லை. சட்டப்போராட்டத்தில் வென்ற சாந்தனுக்கு இந்திய மத்திய அரசு இலங்கைக்கு திரும்ப அனுமதி அளிப்பதாக உறுதியளித்தது.

ஆனால் அதற்குள் சாந்தனின் உடல் நிலை மோசமாகி, கடைசியில் மரணம் அவரை அரவணைத்துக் கொண்டது. சாந்தனின் மரணம் இந்திய அரசின் விருப்பப்படியே நடந்தேறியது. மரணதண்டனையில் இருந்து, ஆயுள் தண்டனையில் இருந்து தப்பினாலும் அவரால் இந்திய அதிகாரத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியவில்லை. சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிய சாந்தன், இந்திய மண்ணிலேயே இறந்து விட வேண்டும் என்பதே இந்தியீ அதிகார வர்க்கத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது. கடைசியில் அது நிறைவேறியது. மீண்டும் ஒருமுறை தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருந்த நம்பிக்கை தகர்க்கப்பட்டிருக்கிறது.இந்தியா மீண்டும் எங்களுக்குத் துரோகம் இழைத்து விட்டதாக அவர்கள் உணருகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. ஈழத் தமிழர்கள் மீதான பாரதத்தின் கோரப்பசி எப்போது அடங்கும்!!

## இலங்கையில் உண்மையைக் கண்ட

இலங்கையில் இடம் பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகியும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை, மனித உரிமை மீற ல்கள் தற்போதும் உள்ளது என ஐக்கிய நாடு கள் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார்.

**நீதிக்கான சூழல் இலங்கையிலில்லை**
**பொறுப்புக்கூறலில் முன்னேற்றமில்லை**
**பாதுகாப்புத்துறையில் மறுசீரமைப்புத் தேவை**
**புதிய சட்டங்களால் அச்சுறுத்தல்கள்**

இலங்கையில், உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ள சூழ்நிலையிலும், நம்பகரமான நீதியைத்தேடும் சூழல் அங்கு நிலவவில்லை. மனித உரிமை மீறல்கள் தற்போதும் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனதுஅதிருப்தியைத ் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது அமர்வு தற்போது நடைபெற்று வருகின்றது. இதிலேயே இந்த விடயத்தை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதில் உரையாற்றும் போதே இவ் விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-**

இலங்கையில் தற்போதும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் தற்போது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் நான் ஆழ்ந்த கவலை கொண்டிருக்கின்றேன். கடந்தகால துயர்நிறைந்த வரலாற்றுக்குப் பொறுப் புக்கூறும் விதத்திலான நடவடிக்கைகள் இலங்கை யில் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, மனித உரிமை மீறல்கள் தற்போதும் அங்கு இடம்பெறுகின்றன. உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துவதில் கூடப் பாதுகாப்புப் படையினரின் இறுக்கமான கண்காணிப்பு இலங்கையில் நிலவுகின்றது. இதனால், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர் கொண்டுள்ளனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

**பொறுப்புக்கூறலில் பலவீனம்**

இலங்கை அதன் பொறுப்புக்கூறல் பணிகளில் தொடர்ந்தும் பலவீனமாகவே செயற்பட்டு வருகின்றது. பொறுப்புக்கூறலுக்காக "உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழு" அமைக்கப்பட்டுள்ள போதிலும் நம்பகரமான நீதியைத் தேடும் பொறிமுறை அங்கில்லை. காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம் இன்னும் தீர்க்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட உறவுகள் தங்களின் அன்புக்குரியவர்களைத் தொடர்ந்தும் தேடிக்கொண்டிருக்கின்றனர். பேரழிவுகரமான ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு இடம்பெற்று கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு மத்தியிலும் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் உண்மையையும் நீதியையும் தேடுகிறார்கள். உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவை அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள நிலையில், நம்பகமான உண்மையைக் கண்டறியும் செயல்முறைக்கான சூழல் இல்லை. கடந்தகால மனிதஉரிமை மீறல் தொடர்பான சட்டங்களால் ஒருபோதும் நீதியை நிலை நாட்ட முடியாது. நீதியைத் தேடுவதற்காக இறுக்கமான மற்றும் ஆத்மார்த்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கையில் தீவிர மான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் நம்பத்தகுந்ததாக குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து வலுப்படுத்த உறுப்பு நாடுகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**பாதுகாப்புத்துறைக்கு மறுசீரமைப்புத் தேவை**

இலங்கையில் பாதுகாப்புத்துறையானது முழுமையாக மறுசீரமைக்கப்படவேண்டும். இராணுவ சித்தாந்தங்களுடனான நடவடிக்கைகள் இலங்கையில் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேல், நீதிமன்றங்களால் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டவர்களுக்கு அரச நியமனங்களை குறிப்பாக பாதுகாப்புத் தொடர்பான உயர் நியமனங்களை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இது இலங்கையின் சூழ்நிலையை மேலும் மேலும் அச்சமாக்குகின்றது. இலங்கையில் பாதுகாப்புத்துறை விரிவான சீர்திருத்தத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி அதற்காகப் பரிந்துரைக்கின்றேன்.

**புதிய சட்டங்களால் அச்சம்**

இலங்கையில் அண்மைக்காலமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய சட்டங்கள். சட்டத்தின் ஆட்சியைப் பலவீனப்படுத்துகின்றன. சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றின் மீது அதீத தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டம் அமைந்துள்ளது. அது ஜனாதிபதிக்கு மட்டற்ற அதிகாரங்களை அச்சப்படும்வகையில் வழங்குகின்றது. ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவற்றையும் இந்தப் புதிய சட்டங்கள் கடுமையாகப் பாதிக்கின்றன. அது தொடர்பில் எனது அலுவலகத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், நானும் கரிசனை கொண்டுள்ளேன்.

**இலங்கையர்களுக்கு உதவுங்கள்**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. இதனால் இலங்கையர்கள் வீதிக்கு இறங்கினார்கள். இலங்கை அரசாங்கம் பொருளாதார மீளெழுச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதிலும், இலங்கையர்களை வறுமை துரத்தவே செய்கின்றது. கடந்த வருடம் நாட்டின் வறுமை வீதம் (வறியோர் வீதம்) 27.9 என்றவாறாக உயர்ந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச்செலவு அங்கு அதிகரித்திருக்கின்றது. இவ்வாறிருக்கையில் இலங்கைக்கு உங்களின் உதவிகளை வழங்குமாறு சர்வதேச நிதிநிறுவனங்கள் மற்றும் கடனாளிகளின் நிதி மற்றும் ஆதரவை இலங்கைக்கு வழங்குமாறு நான் வேண்டுகோள் விடுக்கிறேன் - என்றுள்ளது.

## ஈழ தேசத்தின் மகன் சாந்தன் அவர்களுக்கு வீரவணக்கம்! தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை இரங்கல்!




தமிழர் தாயக கனவை சுமந்து தனது 20 வயதில் தாய் நிலத்திலிருந்து புறப்பட்டு தமிழகத்துக்குச் சென்ற தில்லையம்பலம் சுரேந்திரராஜா என்கின்ற இயற்பெயர் உடைய சாந்தன் அவர்கள் தனக்கு எவ்விதத்திலும் முற்றிலும் தொடர்பில்லாத மறைந்த பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தடா சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் தூக்கு தண்டனை விதிக்கப் பெற்று பின்னர் உச்ச நீதிமன்றத்தினால் ஆயுள் தண்டனை ஆக்கப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இருட் சிறையில் அடைக்கப்பட்டு கொடிய சித்திரவதைகளை அனுபவித்து வந்திருந்தார்.

மேலும் சாந்தன் அவர்கள் சிறையில் இருந்தவாறே சிறை மீளப் போராடிய தன் விளைவாக 2022 ஆம் ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் சிறை வாழ்வில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர் உடனடியாகவே தனது தாயையும், தாய் நாட்டையும் பார்த்து விட வேண்டும் என்ற ஆசையில் இருந்த சாந்தன் அவர்களை இப்பொழுது உள்ள தமிழக அரசு திருச்சியில் உள்ள அகதிகள் சிறப்பு முகாம் என்று கூறிக் கொள்ளும் சித்திரவதை முகாமில் ஒன்றரை ஆண்டுகள் தடுத்து வைத்திருந்தார்கள்.

அங்கிருந்து அண்ணன் சாந்தன் அவர்களை விரைந்து தாயகத்துக்கு அனுப்புங்கள் என்று தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் அனைத்து தரப்பினரும் கொடுத்த அழுத்தத்தின் பிரகாரம் சாந்தன் அவர்களை அனுப்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகி இருந்த நிலையில் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் உடல் நலக்குறைவால் அனுமதிக்கப்பட்டிருந்த சாந்தன் அவர்கள் தனது இறுதிக்கால ஆசைகளை, கனவுகளை அடைய முடியாமல் மர்மமான முறையில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

சாந்தன் அவர்கள் தாய் நாட்டிற்கு வருவதற்கான அனுமதியை ஸ்ரீலங்கா அரசு வழங்கியிருந்தும் கூட இந்திய மத்திய அரசும், தமிழ்நாட்டு அரசும் விரைந்து செயல்படாமையின் விளைவாக சாந்தன் அவர்கள் தாய் நாட்டுக்கு அனுப்பப்படாமல் மரணித்த சம்பவம் மிகவும் வேதனைக்குரியது.

சாந்தன் அவர்களின் இந்த இழப்பை ஈழத் தமிழர்களாகிய நாங்கள் இனி ஒருபோதும் மறந்து விட்டு கடந்து செல்ல முடியாது.

மேலும் சாந்தன் அவர்களுக்கு தமிழ் தேசிய பண்பாட்டு பேரவையின் வீர வணக்கத்தை தெரிவித்து கொண்டு அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இலங்கை அரசின் போலி முகத்திரையை கிழித்தார் மனிதவுரிமை ஆணையாளர்

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்




ஐ.நா மனிதவுரிமைப் பேரவையின் 55 கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக பேரவையின் ஆணையாளர் ஆற்றிய வாய் மூல அறிக்கை இலங்கை அரசின் போலி முகத்திரையை கிழித்துள்ளது.

ஆணையாளரின் உரைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சரின் உரை காணொளி வடிவில் திரையில் காண்பிக்கப்பட்டது அவை அத்தனையும் பொய்யுரை என்பதை ஆணையாளரின் உரை வெளிப்படுத்தியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசிடம் நீதி இல்லை என்பதை புதிய சட்டங்கள் மற்றும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு, காணாமல் ஆக்கப்பட்டோரின உறவினர்களுக்கு கொடுக்கப்படும் அச்சுறுத்தல் , நிலஅபகரிப்பு , போலி நல்லிணக்கம் என்பவற்றை உதாரணப்படுத்தி இலங்கை அரசின் நீதிப் பொறிமுறையின் தோல்வியை உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைராளரின் வாய்மூல உரைக்கு நன்றி கூறும் சம நேரம் தொடர்ந்தும் இலங்கை அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பேரவைக்கு உட்பட்ட தீர்மானங்களுக்கு நீதி வழங்காது என்ற உண்மை உறுதியாகி விட்டது அடுத்த தீர்மானம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துவதாக அமைய வேண்டும் அதுவே பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கை.


# பொலிஸ் அதிகாரமற்ற 13 ரணிலின் தேர்தல் தந்திரம்! தமிழ் அரசியல் தலைவர்கள் விசனம்!!



பொலிஸ் அதிகாரமற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப்பதானது தேர்தல் நாடகம் என்று தமிழ்த் தலைவர்கள் விசனம் வெளி விட்டுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் அதிகாரமற்ற 13ஆவதுதிருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தயார் என்றும் வடக்கு-கிழக்கு தமிழ் முஸ்லிம் பிரதிநிதிளுடன் விரைவில் சந்திப்பை நடத்தவுள்ளதாகவும் விடுத்துள்ள அறிவிப்பு குறித்து கருத்து வெளியிடும்போதே அவர்கள் மேற்கண்ட வாறு தெரிவித்தனர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு.

**புளொட் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவிக்கையில்,**

13ஆவது திருத்தச்சட்டமானது இலங்கையின் அரசியலமைப்பில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் உள்வாங்கப்பட்டதொரு ஏற்பாடாகும். ஆகவே அதனை நடை முறைப்படுத்துவதற்கு கலந்துரையாடல்கள், பேச்சு வார்த்தைகள் அவசியமற்றவையாகும். அந்தவகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது ஆட்சியில் உள்ள அரசாங்கங்களின் கடமையாகின்றது. அத்துடன், அதன் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதித்துவ நிதித்துவ ஆட்சியை உறுதி செய்ய வேண்டியதும் அவசியமாகிறது என்றார்.



**ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநா தன் தெரிவிக்கையில்,**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாகவே அறிவித்தார் அது அரசியலமைப்பில் இருக்கின்ற விடயமொன்று என்று அவர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். ஆகவே, அரசியலமைப்பில் காணப்படுகின்ற விடயத்தை அமுலாக்குவதில் நிபந்தனைகள் தேவையில்லை. குறித்த திருத்த மானது ஏற்கனவே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆகவே 13ஆவது திருத் தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்க வேண்டியது அவசியமாகின்றது.

எம்மைப்பொறுத்தவரையில் நாம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் அற்றவகையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதில் எவ்விதமான நன்மைகளும் இல்லை. வெறுமனே கண்துடைப்புக்காகச் செய்கின்ற செயற்பாடாகும். அதற்கு எம்மால் துணைபோக முடியாது என்றார்.

**ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,**

13ஆவது திருத் தச்சட்டத்தை அமுலாக்குவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்மையி லேயே விருப்பம் உள்ளதா என்பது தான் முக்கியமான கேள்வியாகவுள்ளது. ஆரம்பத்தில் அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச்சட்டம். உள்ளதாகவும் அதனை அமுலாக்கப்போவதாகவும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடத்தில் கூறினார். பின்னர் பௌத்த தேரர்களின் எதிர்ப்பு ஏற்பட்ட யாட்டை கைவிட்டார் அதன்பின்னர் மாகாண முன்னெடுப்பதற் பையின் நிர்வாகத்தை முன் குழுவொன்றை நியமித்து அதனை செயற்படுத்தப்போவதாக விக்னேஸ்வரனுகு உறுதியளித்தார் எனினும் அதன்பின்னர் அந்த வாக்குறுதியும் செயற்படுத்தாமை யினால் விக்னேஸ்வரன் தொடர்ந்தும் நம்பிக்கை கொள்ள முடியாது என்பதை வெளிப்படையாகவே குறிப்பிட்டார்.



இவ்வாறான நிலையில் தற்போது, மீண்டும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதென்பதும், பொலிஸ் அதிகார மற்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்சுப்போவதாக கூறுவதும் வேடிக்கையான விடயமாகவுள்ளது.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13து திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதற் கான இதயசுத்தியான சிந்தனை இருக்குமாக இருந்தால் முதலில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் ஆகக்குறைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலையாவது நடத்த வேண்டும்.

ஆனால், அவர் தமிழ் கட்சிகளை அழைப்பதும், பின்னர் மீண்டும் பேசுவோம் என்று கூறி திருப்பி அனுப்புவதும் தான் தொடர் கதையாக இருக்கின்றது. தற்போது தேர்தலுக்கான காலம் நெருங்கி வருவதால் நாடகமாடுகின்றார் அவர் தமிழர்களை அரவணைப்பதற்காக திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதாக கூறுவதுபோன்றும் மறு பக்கத்தில் தென்னிலங்கைக்குதான் பொலிஸ் அதிகாரத்தை வழங்கப்போவதில்லை என்றும் செய்தியைச் சொல்கின்றார்.




அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |








இப்பத்திரிகை 07.03.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.